[illegible]

V2. No. 44. 7 Nov 1929

SL
ஸ211, N28KN
N29.2.4.
189079

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஞு நவம்பர் மீ 7உ [No. 44.

OFFICE OF ... 1929 ... MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 861
2. அப்பர். (நாடக வியல்)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 863
3. வில்லிபாரத விளக்கம் (இராசசூயச் சருக்கம்)
T. S. நடராஜபிள்ளை. B.A., B. L. 866
4. தமிழ்ப் பாடம் (திருவரங்கத்தந்தாதி) 867
5. நம்மாழ்வார் விபவம்
K. இராஜகோபாலாசாரியார் B.A. B L. 870
6. கம்பராமாயணம் (உலாவியற் படலம்)
T. N. சேஷாசலம் B. A, B. L. 871
7. மலர்வனம் (காதன் மாதவி) "மதுகரம்" 874
8. வர்த்தமானம் 879

## கலா நிலயம்

### கல்சரை அடையும் வகை

I II

'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய' கவிவரர் அருளிய நூல்களே இலக்கியங்கள் ஆகும். அவர்தாம் கல்சருக்குக் கைதர வல்லவர். இன்னதோர் பெருமை வாய்ந்த இலக்கியங்களையும், இலக்கியச் சுவைநிரம்பிய தமதுள்ளத்தில், மேலோர் மொழிகளின் மெய்ப்பொருள் ஊடாடு மறிவுடையோர் அவ்விலக்கியங்களை அளந்துகாட்டி வரைந்துதவும் விளக்கநூல்களையுந் தவிர மற்றப் புத்தகங்கள் எவையும் முதலிடம் பெறுதற் கியைந்தன வாகா. தோன்றாத் துணையாயிருந்து, கதையென்றும் பாட்டென்றும் விளையாட்டாய் நம் மனத்தில் கல்சரெனுங் கற்பகத்தருக்களை இவ்விலக்கியங்கள் வளர்த்துத் தந்தபின், அதன் கனியெனப் பழுக்கும் கொள்கைகள் செம்மையனவென்று ஒப்பு நோக்கித் தேர்வதற்குச் சரித்திரம் சாத்திரம் அனைய நூல்கள் பயன்படுமேயன்றி இப்பின்னவைகளைத் தனித்துப் பயில்வதால் நீடொழிய நலமில்லை. நீரிற்பிறந்து நீரிலேவளருமாயினும் தாமரைக்கு வேரில்லையேல் அது தானுமழுகித் தண்ணீரையுங் கெடுத்துவிடும்.

ஈதுணராமல், பெரும்பாலோர் கண்டகண்ட புத்தகங்களை வாங்கி வாசிப்பதால், தம் கண்ணொளியையும் கைப்பொருளையும் மதியின் திட்பத்தையும் வீணே கெடுத்துக்கொள்கின்றனர். இதனினும் வருந்தத்தக்க நிலை வேறொன்றில்லை. புத்தியைச் செலுத்தி ஒன்றினைப் படிப்பதென்னும் பழக்கமே போய்விடுகின்றது. வர்த்தமானப் பத்திரிகைகள் வரம்பிலாது வழங்கிவரும், கொலை,களவு, வஞ்சனை,பகை, விபசாரம், வீண்வழக்கு, பயனிலாச்சொற்கள் இவைகளை மேலெழுந்தபடி பார்த்துப் போவதல்லாமல், கருத்தூன்றி ஒரு நூலை ஓதுவதென்றால் பாரம்பெரிதென்று திகைக்கின்ற நொய்ம்மையர்களாகிவிடுகின்றனர். உலகப்போக்கு இவ்வகை இருக்கின்றதென்று உணர்த்துமளவில் வர்த்தமானப்பத்திரிகைகள் ஒருசிறிது உதவலாம். ஆனால், விடயங்களை ஆய்ந்தோய்ந்து மதிக்கவல்ல கல்சர்நிலை எய்தியிருப்பவர்கள்தாம் உலகப்போக்கின் உண்மையை உணர்ந்து தம் அறிவைச் சிறிது விசாலப்படுத்திக்கொள்ளக் கூடியவராவர். ஏனையோர் வர்த்தமானப் பத்திரிகைகளை மாத்திரம் விடாதுபடித்துக்கொண்டுவருவதால் சிற்சிலதீமைகள் நேரினும் நேரலாம். இக்காலம், படிக்கத் தெரிந்தவர்களில், நூற்றிற்குத் தொண்ணூற்றொன்பதின்மர் கையில் வர்த்தமானப்பத்திரிகை தவிர வாசிப்பதற்கு வேறொன்றும் எட்டாததை எங்குங் கண்டுவருகின்றோம். தமிழைத் தாய்ப்பாஷையாக உடையவர்களும் ஆங்கிலமொழி அறிந்துகொண்டவர்களும், வர்த்தமானப் பத்திரிகைகளும், அப்பத்திரிகையில் தனித்தனி வந்துள பாதகச் செய்திகளையெல்லாம் ஒன்றாய்த்திரட்டி எழுதப்பெறுகின்ற 'நாவலென்ற' சில அற்பப் புத்தகங்களும் படித்துப் படித்துத் தமக்கு இயற்கையாயுள்ள கல்சரம்சங்களைச் சிறிதுசிறிதாக வதைத்துக்கொள்வதைக் காணுங்கால் பொதுநலம் விழையும் நல்லறிவுடையோர் எவரும் கண்ணீர் வடிப்பார்.

189079
SL
௬௦211, N28 K N
N29.2:44

அமெரிக்காவி லறுபது ஆண்டுகளுக்குமுன் னிருந்த ரால்ப் வால்டோ எமர்ஸன் என்ற வித்தகர், வர்த்தமானப் பத்திரிகைகளால் ஜனங்கள் வீண்காலம் போக்கும்படி ஆயிற்றே என்று நெடிதே உயிர்த்துநைந்தார். இங்கிலாந்திலும் ரஸ்கின் என்ற புலமைசால் பெரியோர் வர்த்தமானப் பத்திரிகைகளை ஓதாது ஒழித்தனர். குணம் நாடிக் குற்றமும் நாடி, ஆசையும் அச்சமும் இன்றி இயம்புங்கால் வர்த்தமானப்பத்திரிகைகளைப் பொதுஜனங்கள் படிப்பதால் பற்பல தீமைகள் பரவுதற் கையமில்லை என்னவே வேண்டிவருகின்றது.

உள்ளத்திற் குறுதி பயக்கவல்ல நல்ல நூல்களைப் படிக்கவேண்டிய நேரத்தைக் கவர்ந்துவிடுவதும், ஒன்றினை ஊன்றிப்படிக்கும் பழக்கத்தைச்சிதைத்துவருவதும் மாத்திரமல்லாது, வர்த்தமானப்பத்திரிகைகள் பின்னுஞ் சிலவகைகளில் கல்சரின்வளர்ச்சிக்கு இடையூறாய் உலவுகின்றன. தீயார் குணங்களை உரைப்பதுங் கேட்பதுந் தீது. படுகொலை, குதிரைப்பந்தையம், பெருமோசம், விபசாரிகளின் செய்கை, இவைகளே பெரிதும் விரவியில்லையாயின் வர்த்தமானப் பத்திரிகைகள் விலையாவதில்லை. ஆகையால் வர்த்தக யுக்தியால் இத்தகைய கொடுமைகளைத் திரட்டித்தர வேண்டியிருக்கின்றது. எனின், மாநுடக்கொடுமையின் இத்தகைய சரித்திரங்களல்லாமல் பெரும்பாலோர் மனதிற்கு நல்லுணவு வேறு வாய்ப்பதில்லை. மனிதரது எண்ணங்கள், அவர் நினைத்துநினைத்துப் பழகிவருகின்ற குணம் பொருள் முதலியவைகளின் நிறத்தைப் பெறலாகின்றனவென்பது நமது அனுபவமும் மானதசாத்திரத்தின் கொள்கையும் ஆகும். பொய்யும் குறளையும் பயனிலாச் சொற்களும் களவும் வஞ்சனையும் சூதும் கள்ளும் காமமும் நம்மைச் சுற்றியிருக்கும் மனிதரிடத்தில் கண்டு பழகுவது போதாதென்றே உலகமடங்கலும் பொல்லாங்கு எத்துணை நிகழ்கின்றதென்பதை நமக்கு அளந்து காட்டி அறிமுகம் செய்துவைக்க வேண்டும்! இதனால் மாநுட இனத்திற்கோர் மேன்மையுளதென்னும் நம்பிக்கையே இல்லாமற் போவதற்கு இடமுளது. இந்த நம்பிக்கை இழந்தபின் எவ்வித நலமும் யாருக்கும் வந்தெய்த வழியில்லை.

பொதுநல மேன்மைகள் வளர்ந்தோங்குதற்கு நிலைக்களமாய இந்நம்பிக்கை நீங்குவதுமல்லாமல், கல்சருக்குரிய இயற்கை அம்சங்களாய் யாவரிடத்தும் இருக்கும் தெய்வசிந்தனை தருமசிந்தனை பகுத்தறிவு முதலியவைகளும் தலையெடுக்கவொட்டாமல் செய்யக்கூடியனவாய் வர்த்தமானப் பத்திரிகைகள் அமைந்திருக்கின்றன. மதக்கொள்கை சார்பான புராணங்களையும் வேதங்களையும் பழித்து நாத்திகத்தை நாட்டுவதே கருமமென விளம்பி நடக்கின்ற பத்திரிகைகளால் பார்க்குமிடத்துப் பெரிதும் ஆபத்தொன்றுமில்லை. இவை, இல்லையென்றேனும் இழிந்ததென்றேனும் எடுத்துக் காட்டுவதன் பொருட்டுக் கடவுள் நினைவு விடாமல் எழுப்பிக் கொண்டிருக்கின்றனவாதலால் தீங்குபோல் அவை சொல்வன செய்வன வெல்லாம் இறுதியில் நன்மையாகவே முடியும் என்று எண்ணுகின்றோம். கடவுளை மறுப்பதற்கும் நிந்திப்பதற்கும் அக்கடவுளை நினைக்கத்தான்வேண்டும். கடவுளை யொருபோதும் நினையாமலிருப்பதினும் நிந்திப்பதற் கென்றேனும் ஒவ்வோர் வேளை நினைப்பது நல்லதே. கனகனைப்போல் கடவுளை மறுத்தும், கம்சனைப்போல் கொல்ல முயன்றும், சிசுபாலனைப்போல் இகழ்ந்தும் உய்வார் சிலர் இலராகார். மற்று, ஒருபோதும் கடவுளை நினையாதார்க்கே உய்யும்நாள் ஒருநாளுமில்லை. ஆதலின், நாத்திகத்தின் சார்பாய் நடக்கின்ற பத்திரிகைகள் கிடக்க, ஏனைய வர்த்தமானப் பத்திரிகைகளோ, பெரும்பாலும், கடவுள் நினைவென்பதே பொதுஜன மனதில் பயிலாவண்ணம் செய்கின்றன. இது, அவைகளால் விளையும் முடிவென்று கூறுகின்றோமேயல்லாது இதுதான் அவைகளது நோக்கம் என்று நாம் இயம்பவரவில்லை. அரசியல் வாதங்களிலும், கட்சிக்குழப்பங்களிலும், வர்த்தகக்கைத்தொழில் ஆசைகளிலும் பொதுஜனங்களின் கவனத்தையெல்லாஞ் செலுத்திவைக்கவே இவைகளிற்றூன் தம்முடைய வாழ்க்கை அடங்கிவிட்டதாக முற்றிலும் விவகரிக்க வர்த்தமானப் பத்திரிகைகள் பழக்கிவைப்பதால் கடவுள்நினைவிற்கு இடமென்பதே எங்கும் இல்லாமற் போகின்றது. இந்தவாரம் 'இந்தியாகுடியேற்ற நாட்டு உரிமைகளை அடைவதே' தம் நோக்கம் என்று வைஸராய் லார்ட்இர்வின் செய்ததோர் விளம்பரத்தைச் சூழ்ந்து, லண்டன் நடுவாக இங்கிலாந்து முழுவதும், டெல்லிமுதல் இந்தியாமுழுவதும், எத்துணைப் பரபரப்பு ஏற்பட்டிருக்கின்றதென்பதை யாவரும் அறிவார். "இனியென், இனியென்!" என ஏற்பார் சிலர். "இதனாலென், இதனாலென்!' என மறுப்பார் சிலர். 'ஏனிது, ஏனிது!' என்று இங்கிலாந்தில் சினங்கொள்வார் பலர். "இது என், 1917-வது வருடத்திய விளம்பரத்தின் விரித்தியோ, வேறோர் நன்கொடையோ," என்று வினவுவார் ஒருபுறம். "பால்ட்வின், கருத்தென்ன, ஸர் ஜான் ஸைமனின் கருத்தென்ன! நம் நாட்டுத் தலைவர்கள் பத்திரிகைப் பரதிநிதிகளிடம் யாது கூறினர்!" என்று விரைந்து நோக்குவார் மறுபுறம். இவைகளினிடையே, "கடவுளின் கருத்து என்னவென்றேனும், இதனால் யாருக்கு என்னவாயிற்றென்றேனும்" எண்ணுதற்கு நேரமேது; எண்ண வேண்டுமென்ற நினைவேது! அரசியல் முறைகளுக்கும், மனிதர்தம் தனித்தனி சுகத்திற்கும் துக்கத்திற்கும், உயர்விற்கும் தாழ்விற்கும், ஆங்கில அறிஞர் டாக்டர் ஜான்ஸன் இயம்பியபடி, என்ன சம்பந்தம் இருக்கின்றது! கடவுளை முன்வைத்து நோக்கினாற்றான் இச் சம்பந்தமின்மை தெரியவரும். அவ்வகை நோக்கும் பழக்கம் கைகூடாவண்ணம் பத்திரிகைகள் செய்யும் ஆரவாரம் அழித்துவிடுகின்றது. குழந்தைகள் தம்பட்டமும் ஊதலும் வேண்டுமென்று அழுகின்றன. அவையில்லாத வாழ்க்கை என்னவாழ்க்கை என்று எண்ணுகின்றன. "தம்பட்டம் அடிக்காத கை என்ன கையோ! ஊதல் ஊதாதவாய் என்ன வாயோ!" என்று குழந்தைகள் பற்பல சூழ்ச்சிகளால் முயல்வதும், தம்பட்டமும் ஊதலும் இவைகளுக்குக்கொடுக்கலாமோ கூடாதோ, அல்லது பெரியவரென்று தம்மை நினைத்துக்கொண்டிருப்பவர்கள்தாம் தம்பட்டம் அடித்தும் ஊதல் ஊதியும் அக் குழந்தைகளுக்குக்காட்டுவது முறையோ என்று விவகரிப்பதற்கும், இப்பொழுது நடைபெறுகின்ற பரபரப்பிற்கும் பெரிதும் பேதமில்லை. இன்னபடி நமது கவனமடங்கலும் புறவுலக விடயங்களே காடாய் அடர்வதால் தெய்வசிந்தனை வளர்வது இயலாததாகின்றது. இதனால் நாம் மறுமையை நினைத்து இம்மைக் குரியன செய்யாது யாவரும் துறவிகளாகவேண்டுமென்று உரைக்க வந்திலம். கார்லைல், எமர்ஸன், மாத்யூ ஆர்னல்ட், முதலான பேரறிஞர் விளக்கியுள்ளபடி இம்மைக்கும் இவைகளாற் பயனில்லை, யாவரும் இதுவரையில் உண்மையான இம்மைப்பயனை அடைந்ததுமில்லை, என்பதையே இங்கு நினைப்பூட்டுகின்றோமேயன்றி வேறன்று. வர்த்தமானப் பத்திரிகைகளின் நோக்கம் இவ்விதம் கல்சருக்கு இடையூறா யிருக்கவேண்டுமென்பது அன்றாயினும், முடிவு அன்னதாக ஏற்படுவதால் அதனை இங்கு எடுத்துக் காட்டவேண்டியது எம்கடமை ஆகின்றது. நல்ல நூல்களைப் படித்து உய்யவேண்டிய நேரத்தை வர்த்தமானப் பத்திரிகைகள் கவர்ந்து கொள்வதுமன்றிச் சுபகல்சருக்குரிய தெய்வசிந்தனைக்கு அவை எதிருற நடப்பதுபோன்றே, தருமசிந்தனை பகுத்தறிவு என்னும் மற்றிரு அம்சங்களது வளர்ச்சிக்கும் மாறாக நடக்கின்ற தன்மையைப் பிற்றைநாள் ஆராய்வோம்.



OFFICE OF THE ... MADRAS

# அப்பர்

## 7. அப்பரும் நாடக வியலும்

[ 845 வது பக்கத் தொடர்ச்சி ]

### iv கூத்துநடத்து முறைகளும் அதன் பிரிவுகளும்.

(4) இனி, பொதுவியல் நாடகத்தில் காணப்படுவன யாவையென் றிங்கு ஆராய்வோம். வேத்தியல் போல், பொதுவியல் பரிசுபெறும் நோக்கத்தை முன்னிட் டாடுவதன்று. விநோதமாய்ப் பொழுதுபோக்குவதற்கும், அல்லது பொதுநன்மைகள் சிறக்குமாறு இஷ்ட தேவதையைக் குறித்து வணங்கி அத்தெய்வத்தின் அருள்பெறவும் ஆடுவதுமாம். வேத்தியலில் காட்டப்படும் சொக்கநிருத்தனம் (Dance), அவிநயம்(Dumb show), நாடகம் (Dramatic presentation of a story) இம்மூன்றும் பொதுவியலில் விரித்துக் காட்டப்படா. பொதுவியலில் ஆடப்படுவன பெரும்பாலும் குரவைக்கூத்தும் வரிக்கூத்துமாம். அவற்றுள்

"குரவை யென்பது கூறுங் காலைச்
செய்தோர் செய்த காமமும் விறலு
மெய்த வுரைக்கும் இயல்பிற் றென்ப"
"வரியெனப் படுவது வகுக்குங் காலைப்
பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலு
மறியக் கூறி யாற்றுழி வழங்கல்" என்பர்.

குரவைக்குச் சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர்குரவையும், குன்றக் குரவையுங் காணலாகும். வரிக்கு வேட்டுவவரி, கானல்வரி முதலியனவும் உள. திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்தில் குரவைக்கும் வரிக்கும் உதாரணங்களாய் எடுத்துக் காட்டத்தக்க பதிகங்கள் உளவோவென ஆராய்வோம்:—

குரவை:-குரவை என்பது எழுவரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்தாடும் கூத்தாகும். இதன் வழி:-

"குரவை யென்ப தெழுவர் மங்கையர்
செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்
தந்நிலைக் கொட்பநின் றாட லாகும்"

ஆய்ச்சியர்தம் சேரிக்கு உற்பாதசாந்தியரக மாதரி முதலானோர் ஆடியதுபோல், அப்பரும் "ஒடுங்கும் பிணிப்பிறவிகேடென்றிவை" நமது வாழ்க்கையினின்று களையும்வண்ணம் சிறந்ததோர் குரவை தொகுத்தனர். அதுவே திருவங்கமாலை யென யாவரும் அறிந்த திருப்பதிகமாகும். தன்னையே மாதரியாக்கி, எடுத்துக்காட்டும் இளங்கோதையர் எழுவருக்கு முறையே, தலை, கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கை யென்பனவாக வைத்து ஆடுகின்றார். ஒன்பது மங்கையர் ஆடுவது குரவைக்கு ஏற்குமாயினும், இருவரை இக் குரவைக்கு வேண்டாவென்று நீக்கும் கருத்துக் காண்க:-

"ஆக்கையாற் பயனென்:—அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றி யென்னாதவிவ்
வாக்கையாற் பயனென்?
கால்களாற் பயனென் - கறைக்
கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்களாற் பயனென் ?"

திருவங்கமாலை 5, 6.

எனப் பரிசவுணர்ச்சி பெற்றதைப் பயன்படுத்தா * ஆக்கையையும், நடத்த லிலக்கணம் வாய்ந்தும் செல்லவேண்டிய தலங்கள் செல்லாக் காலும், இக்குரவைக்குப் பயன்படாவென நீக்கி, ஏனைய உணர்ச்சிபெற்ற புத்தி நிலயமாகிய தலையும், காட்சிக்குரிய கண்ணும், கேள்விக்குரிய செவியும், வாழ்த்தும் வாயும், பரமனையெண்ணும் நெஞ்சும், கூப்பித்தொழும் கையும் எனப் பொருள்கூறுமலே இவ்வெழுவரை(உருவகமாக)எடுத்தனர். இதன் உரைப்பாட்டுமடை:—

உற்றா ராருளரோ-உயிர்-கொண்டுபோம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லா-னமக்-குற்றாராருளரோ

ஆதலால்,

(பாட்டுமடை)

தலையே! நீ வணங்காய்!—தலை
மாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்! 1

கண்காள்! காண்மின்களோ!—கட
னஞ்சுண்ட கண்டன்றன்னை
யெண்டோள் வீசிநின் றாடும்பிரான் றன்னைக்
கண்காள் காண்மின்களோ! 2

செவிகாள்! கேண்மின்களோ!—சிவ
னெம்மிறை செம்பவள
மெரிபோன் மேனிப்பி ரான்றிற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ! 3

மூக்கே! நீ முரலாய்—முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே! நீ முரலாய்! 4

வாயே! வாழ்த்து கண்டாய்!—மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும் பிரான்றன்னை
வாயே வாழ்த்து கண்டாய்! 5

நெஞ்சே நீ நினையாய்!—நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைமணாளனை
நெஞ்சே! நீ நினையாய்! 6

கைகாள்! கூப்பித்தொழீர்!—கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர்! 7

(உள்வரி வாழ்த்து)

இறுமாந் திருப்பன்கொலோ—ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங்
கிறுமாந் திருப்பன்கொலோ! 11.

---

* ஆய்ச்சியர் குரவையில் படர்க்கைப் பாவலினுள்ள மூன்று செய்யுட்களும் முறையே "திருமால் சீர் கேளாத செவியென்ன செவியோ" என்றும், "கரியவனைக்காணாத கண்ணென்ன கண்ணே" என்றும் "நாராயணா வென்னா நாவென்ன நாவோ" என்றும் முடிவதைக் காண்க.

(படர்க்கைப் பரவல்)
தேடிக் கண்டுகொண்டேன்! — திரு
மாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணுத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்! 12.

திருநாவுக்கரசுநாயனுர் பலகாலம் சமணராய் இருந்ததால், சிலப்பதிகாரம் முதலிய சமணநூல்கள் இவர் மனதில் நன்ருக வேரூன்றியிருந்தன வென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஆய்ச்சியர் குரவையில் "ஆடுநர்ப்புகழ்தல்" * என்னும் பாகத்திய செய்யுள் நடையில், சமணர் கண்டிராத சொற்சுவை பொருட்சுவை வாய்ந்த "திருவேகம்பம் - பண் - காந்தார"மென்னும் பதிகம் † அப்பர் திருவாய்மலர்ந்தமை காண்க:—

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
யரவாடச் சடைதாழ வங்கையி லனலேந்தி
யிரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே 1
[பவளத்
தேனேக்குங் கிளைமழலை யுமைகேள்வன் செழும்
தானேக்குந் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை
வானேக்கும் வளர்மதிசேர் சடையானை வானேர்க்கு
மேனேக்கும் பெருமானையென்மனத்தே வைத்தேனே

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானேர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
யப்போது மலர்தூவி யைம்புலனு மகத்தடக்கி
யெப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே 3

அண்டமா யாதியா யருமறையோ டைம்பூதப்
பிண்டமாயுலகுக்கோர் பெய்பொருளாம்பிஞ்ஞகனைத்
தொண்டர்தா மலர்தூவிச் சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர்சடையானையென்மனத்தேவைத்தேனே

ஆறேறு சடையானை யாயிரம்பே ரம்மானைப்
பாறேறு படுதலையிற் பலிகொள்ளும் பரம்பரனை
நீறேறு திருமேனி நின்மலனை நெடுந்தூவி
யேறேறும் பெருமானை யென்மனத்தே வைத்தேன் 5

தேசனைத் தேசங்கள் தொழநின்ற திருமாலாற்
பூசனைப் பூசனைக ளுகப்பானைப் பூவின்கண்
வாசனை மலைநிலநீர் தீவளியா காசமா
மீசனை யெம்பெருமானையென்மனத்தே வைத்தேனே 6

நல்லானை நல்லான நான்மறையோ டாறங்கம்
வல்லானை வல்லார்கள் மனத்துறையு மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத் துகளேது
மில்லானை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே 7

* (சிலப்பதிகாரம் - ஆய்ச்சியர்குரவை) ஆடுநர்ப்புகழ்தல்: — மாயவன்றன் முன்னிஞெடும் வரிவளைக்கைப்பின்னையொடுங் கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர [தத் வாய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட்டசோதையார் தொழுதேத் தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே!

[குறிப்பு இதே நடையில் திருவாசகம் - அச்சோப்பத்தும் "முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனை" என்னும் திருப்பதிகமும் பாடப்பட்டன]

†இப்பதிகம் அப்பர் திருமுறைகளிற் சிறந்த மாணிக்கமாகும். வாசிப்போர்க்கு இங்குத் தேடும் சிரம மொழிப்பப் பதிகமுற்றும் வரையப்பட்டது. இது முத்தமிழிற்கும் உதாரணமாகக் காட்டப் பயன்படும்.

விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு தேவங்கள் [னைத்
புரித்தானைப் பதஞ்சந்திப் பொருளுருவாம் புண்ணிய
தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேன் மதின்மூன்று
மெரித்தானை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே

ஆகம்பத் தரவணையா னயனறிதற் கரியானைப்
பாகம்பெ ணுண்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோது மிறையானை மதிற்கச்சி
யேகம்ப மேயானை யென்மனத்தே வைத்தேனே. 9

அடுத்தானை யுரித்தானை யருச்சனற்குப் பாசுபதங்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாய
மெடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்
[தேனே 10

இவ்வாறு நான்கு மாங்காய்ச் சீர்களா லாக்கிய கலி விருத்தம் சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில்† முன்னிலைப் பரவலிலும், ஒருவாறு ‡ படர்க்கைப் பரவலிலும் அமைந்திருப்பன காண்க.

ஆய்ச்சியர் குரவையில் உள்வரிவாழ்த்துப் போல், திருநாவுக்கரசுநாயனுர் தேவாரத்திலும் ஒரு பதிகம் காணலாம் இவ் வாழ்த்து, வெண்டளை பிறழாத கலி விருத்தங்களா லாக்கப்பட்டன:—

திருப்புகலூர் - பண் - இந்தளம்

செய்யர்வெண் ணூலர் கருமான் மறிதுள்ளும்
கையர் கனைகழல் கட்டிய காலினர்
மெய்யர்மெய்ந் நின்றவர்க் கல்லாத வர்க்கென்றும்
பொய்யர் புகலூர்ப் புரிசடை யாரே 1

மேகந லூர்தியர் மின்போல் மிளிர்சடைப்
பாக மதிநுத லாளையோர் பாகத்தர்
நாக வளையினர் நாக வுடையினர்
போகர் புகலூர்ப் புரிசடை யாரே. 2

பெருந்தாழ் சடைமுடி மேற்பிறை சூடிக்
கருந்தாழ் குழலியுந் தாமுங் கலந்து
திருந்தா மனமுடை யார்திறத் தென்றும்
பொருந்தார் புகலூர் புரிசடை யாரே. 3

அக்கா ரணிவட மாகத்தர் நாகத்தர்
நக்கா ரிளமதிக் கண்ணியர் நாடொறும்
உக்கார் தலைபிடித் துண்பலிக் கூர்தொறும்
புக்கார் புகலூர்ப் புரிசடை யாரே. 4

ஆர்த்தா ருயிரடு மந்தகன் றன்னுடல்
பேர்த்தார் பிறைநுதற் பெண்ணினல் லாளுட்கக்
கூர்த்தார் மருப்பிற் கொலைக்களிற் றீருரி
போர்த்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 5

உதைத்தார் மறலி யுருளவோர் காலாற்
சிதைத்தார் திகழ்தக்கன் செய்தநல் வேள்வி
பதைத்தார் சிரங்கரங் கொண்டுவெய் யோன்கண்
புதைத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 6

† வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணுக்கிக் கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே கலக்கியகை யசோதையார் கடைகயிற்ருற் கட்டுண்கை மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே!
(முன்-பர-1)

‡மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத் தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே? திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே!
(படர்-பர-1)



தூமன் சுறவந் துதைந்த கொடியுடைக்
காமன் கணைவலங் காய்ந்தமுக் கண்ணினர்
சேம நெறியினர் சீரை யுடையவர்
பூமன் புகலூர்ப் புரிசடை யாரே. 7

கரிந்தார் தலையர் கடிமதின் மூன்றுந்
தெரிந்தார் கணைகள் செழுந்தழ லுண்ண
விரிந்தார் சடைமேல் விரிபுனற் கங்கை
புரிந்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 8

ஈண்டா ரழலி லிருவருங் கைதொழ
நீண்டார் நெடுந்தடு மாற்ற நிலையஞ்ச
மாண்டார்த மென்பு மலர்க்கொன்றை மாலையும்
பூண்டார் புகலூர்ப் புரிசடை யாரே 9

கறுத்தார் மணிகண்டங் கால்விர லூன்றி
இறுத்தா ரிலங்கையர் கோன்முடி பத்து
மறுத்தார் புலனைந்து மாயிழை பாகம்
பொறுத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 10

இப்பாசுரங்களுடன் சிலப்பதிகார உள்வரிவாழ்த்துச் செய்யுட்களை ஒத்திட்டுக் காண்க:—

கோவா மலையாரங் கோத்த கடலாரந்
தேவர்கோன் பூணூரந் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணூரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா னென்பரால் 1
பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணுண்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன் [டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருளுடையா னென்பரால். 2
முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவிரே ளோச்சிக் கடல்கடைந்த னென்பரால் 3

இவ்வாறு உள்வரி வாழ்த்துநடையில் சிவபெருமான்வாழ்த்து தேவாரத்தில் பாடியதுமாத்திரமன்று; ஆய்ச்சியர்குரவையில்கூத்துட்பட்டபின்பாடியபாட்டு அகவற் றளையமைந்த வஞ்சி கலி விருத்தங்கள்போல் அகவற் றளை பிறழாது திருவாரூர்-அறநெறித் திருப்பதிகம், அப்பர் பாடியதைக் காண்க:—

ஆய்ச்சியர் குரவை - பாட்டு

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ! 1

பாம்பு கயிறுக் கடல்கடைந்த மாயவ
னீன்றுநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ! 2

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ!
தொழுனைத் துறைவனோ டாடிய பின்னை
யணிநிறம் பாடுகேம் யாம். 3

இறுமென் சாய னுடங்க நுடங்கி
யறுவை யொளித்தான் வடிவென் கோயா
மறுவை யொளித்தா னயர வயரு
நறுமென்சாயன் முகமென் கோயாம்! 1

வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலு
ணெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயா
நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம். 2

தையல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தாண் முகமென் கோயாங்
கையி லொளித்தாண் முகங்கண் டழுங்கி
மைய லுழந்தான் வடிவென் கோயாம். 3

இத்துடன் ஒத்திடுவதற்கு ஒரு பாசுரம் அப்பரில் எடுப்போம்:—

எத்திசை புகினு மெமக்கொரு தீதிலை
தெத்தே யெனமுரன் றெம்மு ளுழிதர்வர்
மூத்தீ யனையதோர் மூவிலை வேல்பிடித்
தத்தீ நிறத்தா ரரநெறி யாரே.

— திருவாரூர் - அரநெறி 1.

இத்தகைய பதிகங்கள்இபற்சீரா லமையப்படினும், ஆசிரியத்தளை சிறு பான்மையும், பெரும்பாலும் (இயற்சீர்) வெண்டளையும் அப்பர் பதிகத்திற் காண்கின்ருேம். விடந்தீர்த்த திருப்பதிகமும் ஒருவகைக் குரவைப்பாட்டே. நாகத்தால் வந்த துன்பம் நீங்குமாறு பாடிய குரவைப்பாட்டில் அடிகள் 2-ம், 3-ம் மடக்காயிருப்பது வழக்கம். விடந்தீர்த்த திருப்பதிகமோ முற்றும் (நான் கடியும்) மடக்காயிருப்பதைக்காண்க:—

(விடந்தீர்த்த திருப்பதிகம்)

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலைக் கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே. 1

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றந்நெரிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்தலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே. 10

இவைமுற்றும் கூவிளச்சீரால் அமைந்தன. "விளமது வருமென விதித்த வீட்டினில், விளமது கொண்டிலாக்காயும்" வருதல் மரபென்பர் விருத்தப்பாவியலாசிரியர். "தானே" என்னும் ஒவ்வொரு செய்யுண் முடிவும் இசையில் தேமாவாயிராமல் மாங்காய்ச்சீரா யொலிக்கும். இதே மாதிரியான திருப்பதிகம் 5-ம் திருமுறையில் ஒரு திருக்குறுந்தொகைப் பதிகமும் காணலாகும். அது "நேர் பதினொன்றே நிரை பன்னிரண்டே" என்னும் கட்டளைக்குட்பட்டன வாகையால் முதற்சீர் தேமா வாகும் —

தனித் திருக்குறுந்தொகை.

ஒன்று வெண்பிறைக் கண்ணியோர் கோவண
மொன்று கீளுமை யோடு முடுத்தது
ஒன்று வெண்டலை யேந்தியெம் முள்ளத்தே
யொன்றி நின்றங் குறையு மொருவனே. 1

பத்து நூறவன் வெங்கண்வெள் ளேற்றண்ணல்
பத்து நூறவன் பல்சடை தோண்மிசை
பத்தி யாமில மாதலின் ஞானத்தாற்
பத்தி யானிடங் கொண்டது பள்ளியே. 10

# வில்லி பாரத விளக்கம்

## சபா பருவம்.

(854 வது பக்கத் தொடர்ச்சி)

இராசசூயச் சருக்கம்.

*கஞ்சனெனு மாமனொடு காளையமர் செய்தான்*
*வஞ்சனையி னுலமரு மெத்தனைம லேந்தான்*
*றஞ்சமென வேமருவு தமரிலொரு தானே*
*மிஞ்சிவிர காலுரிய மேதினிபு ரந்தான்.*

**[இளவெருது போன்ற கிருஷ்ணன், கம்சனாகிய தன்னு
டைய மாமனுடன் சண்டை செய்தான்; தந்திரத்தால் சண்
டைகள் எத்தனையோ செய்தான்; அடைக்கல மென்று
சேர்ந்த சுற்றத்தாரில் தான் மட்டும் மேம்பட்டுச் சூதினால்
தன்னதாக்கிய அரசை ஆண்டான்]**

இவன துறவையறிந் திவனைக் கூவியழைத்துப் பரிந்
துபசரித் தன்புடன் றனது திருவோலக்கத்தி லமர்த்
திய கம்சனுக்கு நன்றிபாராட்டாது, உப்பிட்டவனை
யுள்ளளவு நினையாது, அரியாதனத்தமர்ந்து வேறு
காரியத்திற் கருத்தூன்றியிருந்த வமயத்தி லதன்மே
லேறி யவனை யிழுத்துக் கொன்று னிவன். உடன்
பிறந்தே கொல்லும் நோபனையான், இதுபோல் வஞ்
சனையால் முன்னம் புரிந்த போர்க ளெண்ணிறந்தன.
காட்டிற்றிரிதரும் விலங்குக் கூட்டங்கள் போன்று,
உற்றுருநவினரை யெல்லாம் வெருட்டித் தனக்கடங்
கிய கூட்டத்தொடு உலாவிவரும் விலங்குத் தன்மை
பொருந்தியவனிவன். விலங்குகளெல்லாம் தத்தம்
மெய்வலியால் வெற்றியடையும், இவனோ விரகாலம்
தடைந்தான். இளங்காளையாகிய இவன் வயதால்
மூத்த கம்சனை வென்றதெத்தனை புதுமை! இவனைச்
சரண்புகுந்த சுற்றத்தாரில் விஞ்சி, ஆருமில்லாவூரு
க்கு அரசரோய் விளங்குகின்றான்.

*அன்னையுந் தாதை தானு*
*மருஞ்சிறை யகத்து வைக*
*முன்னிரு மூவர் முன்னோர்*
*தங்களை முருக்கு வித்தான்*
*பின்னொரு தமையன் றன்னைப்*
*பெற்றதா யிருவ ரென்றென்*
*றிங்கிலஞ் சொல்ல வைத்தா*
*னிவனைவே றியாவ ரொப்பார்.*

**[தாயுந் தந்தையு மீளுதற்கரிய சிறைச்சாலையினுள் இரு
க்க, முன்னால் அறுவர் தமையன்மாரைக் கொல்லுவித்
தான்; இன்னுமொரு தமையனை இவனைப் பெற்ற தாயார்
இருவரென்று உலகத்தாரெல்லாம் சொல்லி நகையாட
வைத்தான்; இவனை யொப்பவர் வேறே யாருளர்?]**

இவனைப் பெறுதற் கிவன்றந்தையெந் நோற்றான்
கொல்! பிள்ளையாற் பெறும்பேறி லிவன்றந்தை
பெற்றபேர் யார்பெற்றார்? இனி யார் பெறுவார்?
இவன் காரணமாய்த் தாயுந் தந்தையுஞ் சிறையுற்
றிருந்தனர். சிறையே யவர்களுக்குச் சிறந்த வகமாய்
வாய்த்தது. தாய்தந்தையருக் குற்ற விடுக்கண்ணி
னுந் தமையன்மார்க் குற்றகேடு பொல்லாதது. இர
ணியகசிபின் புத்திரா றுவரைப் பலியூட்டியவனிவனே.
இவனது சுயநலச் செயல்களைக் காண்மினோ! தான்
மட்டு முய்தற்பொருட்டுப் பல சூழ்ச்சிகளைச் செய்து
முடித்தான்; தன்னண்ணன்மாரை யொருவகையி லுங்
காக்க முயலாமல், கோபத்திற் கிரையாக்கினன்.

தன் மூத்தோனான பலராமனைக் கருவில் தேவகி
வயிற்றினின்றும் பெயர்த்து ரோகணிவயிற்றிற் சேரப்
பண்ணி, அவனுக்குத் தாய ரிருவரென்று உலகம்
பழிக்கச்செய்தது மிவன் செயலே. தன் காரியம்
நிறைவேறவேண்டி யக்கருமத்தைச் செய்தனனே
யொழிய வதனால் தன் னண்ணனுக் குற்ற குறைவை
யெண்ணிலன்.

இன்னணம் பலபடப்பேசிய பேச்சுக்க ளொன்றன்
மே லொன்று யுயர்ந்தன. இக் கட்டுரைகளைக் கேட்ட
கிருஷ்ணனுக்குக் கறுவம் மிகுந்தது. மாற்றமொன்றும்
புகலானாகிப் புரவிநெடுந் தேர்மேற்கொண்டு சிசுபால
னைப் போருக்கழைத்தான். இருவருக்கும் நகருக்குப்
புறம்பேயுள்ள வோர் வெற்றிடத்திற் போர் நிகழ்ந்
தது. இருதிறத்துச் சேனைகளுங் கைகலந்தன. களி
றுங் களிறுந் தாக்கின, பரிமாவு மாவு மெதிர்த்தன.
சுற்றத்தார் தத்தம் தலைவரை நாடிச் சூழ்ந்து சூளுறு
கட்டுரைகள் பல சொல்லன் மேவினர். அரசருக்கர
சர் பலர் மலைவதானர்.

*சிங்க மொன்றுட னொன்று சீறுசெ*
*ருக்கெ னும்படி சேனைவாய்*
*வங்கர் கொங்கணர் துளுவ ராரியர்*
*மகத ரொட்டியர் மாளவர்*
*கங்கர் கொங்கர் தெலுங்கர்*
*கலிங்கர் சிங்களர் கௌசல*
*ரங்கர் சோனக ரானவீ ரதிர்ந்*
*துதங்க ளினமர் செய்தார்.*

இச்செய்யுட் பெரும்பாலு மொன்று மூன்று ஐந்
தாஞ் சீர்கள் மாச்சீர்களாயும், மற்றையவை விளச்
சீர்களாயு மமைந்துள்ள எழுசீ ராசிரியவிருத்தம். இத
னி னமைப்பிற்கேற்ப நாட்டினர் பெயர்களை யடை
மொழிகளின்றி யமைத்திருத்தலோர் கைவன்மை.

நெடுநேரமிருவரும் வெற்றிதோல்வியின்றி, வஞ்சின
மொழிகளுரைத்துப் போர்செய்தபின், சிசுபாலனை
வானேற்றக் கருதி

*கஞ்சனை முனிந்தோ னிவன்முடித் தலைமேற்*
*கதிர்மணித் திகிரியே வினனே !*

கஞ்சனை முனிந்தோ னேவினா னென்றது, சிசுபால
னும் கம்சனும் ஓரே சாபநிவிருத்தி யுடையாரென்ப
தைக் குறிக்கவாம். தலை துணிக்கப்பட்டவுட னவ
னுடலிலிருந் தோரொளி வெளிக்கிளம்பி யுலகளந்த
திருவடியுடைய கண்ணன் கழலிணைகளைச் சேர்ந்தது.
இதனைக் கண்ணுற்று ரனைவருமிதன் காரண மியாதோ
வென வயிர்த்தார். வியாச னவனது பழைய வரலாறு
கூறத்தொடங்கி, [னந்தன்
ஐவகைவடிவா யெங்குமாய் நின்ற வச்சுதன மலனு
ஆன திருமாலைக் காணத் துருவாசமுனிவன் வைகு
ண்டம் சென்றதும், அங்கே வாயிற்காப்பாளரா
யிருந்த ஜய விஜயர்களிருவரும் அவரைத் தடுத்ததும்,
அதனாற் கசட்டுறு முனி வெம்பி யவர்களைச் சபித்
ததும், பின் னவ ருலகினில் திருமாலுக் குகந்த அடிய



ராய் ஐம்முறைப் பிறத்தலைவிட மும்முறை யவர்க்குத்
தெவ்வராய்த் தோன்றி வீடுபெறும்பேறே விரும்பி
யுலகில் இரணிய விரணியாக்கர்களாயும், இராவண
கும்பகர்ணர்களாயும், கம்ச சிசுபாலர்களாயும் பிறந்
ததும், தெரிவித்தார். ஐவகை வடிவென்பது திரு
மால் பரம்பொருளாய்ப் பரமபதத்தி லெழுந்தருளி
யிருக்கும் நிலையையும், வியூகமாய் நான்குருவுடன்
திருப்பாற்கடலி லெழுந்தருளியிருக்கும் நிலையையும்,
இறக்கும் தன்மையுடைய மானிட வுருவெடுத்து
இராம கிருஷ்ணராய்த் தோன்றிய தன்மையையும்,
இயங்குதிணை யியங்காத்திணைப் பொருள்களிலெல்
லாம் உள்ளுறைபொருளாய் நிற்கும் தன்மையையும்,
விக்கிரக வுருவாய் நிற்கும் தோற்றத்தையும் குறிக்கு
மாம். இவ்வரலாறுகளைக் கேட்ட மன்னரும் மற்றோ
ரும் கிருஷ்ணனை வணங்கித் தருமன் செய்த பல்லுப
சாரங்களைப் பெற்றுத் தத்த மிருக்கை யெய்தினர்கள்.

*முன்குலத் தவர்க்கு முனிகுலத் தவர்க்கு*
*மும்மதக் கைம்முகக் களிற்று*
*மன்குலத் தவர்க்கும் வான்குலத் தவர்க்கும்*
*வரம்பிலா வகைக்கலை தெரியு*
*நன்குலத் தவர்க்கும் பெருளெலா நல்கி*
*நாடொறும் புகழ்மிக வளர்வான்*
*றன்குலக் கதிர்போற் றேய்ந்தொளி சிறந்தான்*
*றண்ணளித் தருமரா சனுமே.*

[அந்தணகுலத்தார்க்கும், முனிவர் வகுப்பினர்களுக்கும்,
மும்மதமுந் துதிக்கையுமுடைய யானைப்படைகளையுடைய
அரச குலத்தார்க்கும், தேவர்களுக்கும், அளவில்லா நூல்
களை யோதியுணர்ந்த புலவர்களுக்கும், பொருளையெல்
லாம் கொடுத்து, நாள்தோறும் தன்புக ழதிகமாகப்பெற்ற
குளிர்ச்சியான கருணைபொருந்திய தருமன், தன் குலத்
திற்குரிய சந்திரனைப்போலத் தேய்ந்து ஒளிமிகுந்தான்.]

தருமன் வெறும்பொருளை நல்கிப் புகழ்ப்பொருளைத்
தேடினான். தன்னுடம்பைத் தேய்த்தும் வானவர்க்
கமுத முதவுந் தண்கதிரோனை யாவருங் கொண்டாடு
தல்போல, பொருளையிறைத்துச் செல்வங் குறைந்துந்
தருமன் யாவராலும் புகழப்பட்டான். இறைக்கப்
படும் கிணர் சுரத்தல்போல், கிரணங்களையிழந்த சந்
திர னவைகளை மீண்டுமடைந்து விளங்கல்போல், இழ
ந்த செல்வமும் அவற்குப் புகழி னுதவியால் வந்துற்
றது. ஒளிகுறைந்தும் மதி மதிக்கப்படுதல்போல்,
பொருளிழந்துந் தன்னொளிகெடாது அவற்குப் புக
ழெய்திற்று. பொருள்தேய்ந்துந் தேயா திருந்த
தவன் தண்ணளியே

இராசசூயச் சருக்கம் முற்றிற்று.

# தமிழ்ப் பாடம் 96.

## [ அஷ்ட பிரபந்தம். ]

[ 850-வது பக்கத் தொடர்ச்சி ]

### திருவரங்கத் தந்தாதி

*கண்ட கனவின் பொருள்போல யாவும்பொய் கால*
*[னென்னுங்*
*கண்ட கனாவி கவர்வது வேமெய் கதிநல்கெனக்*
*கண்ட கனாவிப் பொழுதேசெல்கென்றருள் காரரங்கற்*
*கண்ட கனவின் புறக்கண்டு வாழ்த்திக் கடிதுய்ம்மினே*

பதப்பிரிவு:—கண்ட கனவின் பொருள் போல
யாவும் பொய் காலன் என்னும் கண்டகன் ஆவி கவர்
வதுவே மெய் கதி நல்கு என கண்டகனா இ பொழுதே
செல்க என்று அருள் கார் அரங்கன் கண் தக நா
இன்பு உற கண்டு வாழ்த்தி கடிது உய்ம்மின் ஏ.

பதவுரை.

கனவின் - சொப்பனத்தில், கண்ட - காணப்படு
கின்ற, பொருள்போல் - பொருள்களைப்போல், யா
வும் - நனவில் காண்கின்றவைகளும், பொய் - நிலை
யற்றதாய்ச் சிறிதுகாலமிருந்து மறைகின்றவைகளாம்.
(ஆனால் எதுதான் மெய் என்றால்), காலன் என்னும் -
யமன் என்கின்ற, கண்டகன் - கொடியவன், ஆவி -
உயிரை, கவர்வதுவே - கவர்ந்துகொள்வதே, மெய் -
நிச்சயம், (ஆகையால் வீணிற்கு இவ்வுலக வாஞ்சை
யில் கிடந்து உழலாமல்),

"கதி - உயர்ந்த பரமபதத்தை, நல்கு - அருள்
வாய்," என - என்று (கண்டாகர்ணன் வேண்ட),
'கண்டகனா - கண்டாகர்ணனே, இப்பொழுதே - இப்
பொழுதே, செல்க - பரமபதம் செல்வாயாக' என்று-
என்று, அருள் - அருள்புரிந்த, கார் - கார்மேகம்
போன்ற, அரங்கன் - ஸ்ரீரங்கநாதனை, கண் - (உங்
கள்) கண்கள், தக - பெருமையடையும்படி, கண்டு -
பார்த்தும், நா - நாவானது, இன்பு - இன்பம், உற -
அடையும்படி, வாழ்த்தி - துதித்தும், கடிது - விரை
வில், உய்ம்மின் - கடைத்தேறுங்கள்.

**விளக்கம்:**—கண்டகனாவி, என்னும் யமக எழுத்
துக்கள், முதலடியில் கண்ட கனவி(ன்), என இர
ண்டு சொற்களாய்ப் பிரிந்தன. கண்ட, என்னும் முதல்
சொல் பெயரெச்சம். இரண்டாமடியில், கண்டகன்
ஆவி, எனப் பிரிந்தன. கண்டகம், என்பதற்கு
வடமொழியில் முள் என்பது அர்த்தம். கண்டகன் -
முள்ளைப்போன்றவன், கொடியவன். கண்டகன் +
ஆவி = கண்டகனாவி, என, நிலைமொழி ஈற்று (ன்)
மெய்யின்மேல், வருமொழிமுதல் (ஆ) உயிர் ஏறி,
(னா) உயிர்மெய் ஆயிற்று. ஆவி, இரண்டாம் வேற்
றுமைத் தொகை. மூன்றுமடியில், 'கண்டகனா இ'
எனப்பிரியும். முதற் சொல், கண்டாகர்ணன் என்னும்
வடமொழிப்பெயர், கண்டகன் எனச்சிதைந்து, கண்
டகனா என எட்டாம்வேற்றுமை பெற்றது. இ, என்
பது சுட்டிடைச்சொல். இது முன், கண்டகனா என்
னும் சொல்லின் ஈற்றிலுள்ள ஆகார உயிருடன்
சேரும்போது வ் என்ற உடம்படுமெய் வர, அதன்
மேல் இ ஏறி, வி என ஆயிற்று. நான்காம் அடியில்,
கண் தக நா இ (ன்புற) எனப்பிரியும். கண் + தக =
கண்டக, எனப் புணர்வதன் விதி இனிவரும் இலக்
கணப் பாடங்களில் கூறப்படும். நாக்கு, என்னும்
பொருளுடைய நா என்னும் சொல் தந்நகரமா யிருந்
தாலும் இங்கு யமகத்திற்காக னா என்று றன்னகர

மாக எழுதப்பட்டிருக்கின்றது. நா+இன்புற= நாவின்புற என வகர உடம்படுமெய் வரலாயிற்று.

விரிவுரை:—உலகப் பொருள்கள் யாவும் பொய்த் தோற்றங்களேயன்றி,நிச்சயமென்றேனும்நிலையுள்ளனவென்றேனும் எண்ணி வீண்மோசம் போகவேண்டாவென்று கவி முதலில் அறிவுறுத்துகின்றார். "கண்ணால் காண்கின்றோமே, கையால் தொடுகின்றோமே, இப்பொருள்கள் பொய்த்தோற்ற மென்றுரைத்தால் நாங்கள் அதனைஎவ்வாறு நம்புவோம்! இப்பொருள்களால் இன்பமும் துன்பமும் நாங்கள் அனுபவிக்கவில்லையா,"என்றுகேட்பார்க்குக் கவி கனவை உதாரணமாகக் காட்டுகின்றார். கனவு கண்டுகொண்டிருக்கும்போது, அங்கு நிகழ்கின்றவைகள் யாவும் நிச்சயம் என்று எண்ணியேயன்றோ இன்பமுந் துன்பமும் அக்கனவினுள் அனுபவிக்கின்றோம். ஆனால், அதனிற்காணும் பொருள்களெல்லாம் பொய்யேதான் அல்லவா. நித்திரை தெளிந்ததும் கண்டதவ்வளவும், பட்ட சுகதுக்கங்கள் யாவும், பொய்யென்று உணர்ந்துகொள்கின்றோம். அவ்விதமே, நம்மைச் சூழ்ந்திருக்கின்ற மாயை யென்னும் நெடுந்தூக்கத்தில் நேர்கின்ற கனவாம் இவ்வுலக விஷயங்கள். அத்தூக்கந் தீர்ந்து ஞானக்கண் திறக்குமாயின், "இப் பொய்உலகத்தையோ இத்தனைகாலம் மெய்யென்று எண்ணிப் படாத பாடுபட்டோம்" என்று உணர்பவர் ஆவோம். நம் வாழ்க்கையே நித்திரையென்றும் அதனுள் விவகரிப்பதெல்லாம் கனவென்றுங் கூறினால், இரவில் உறங்குவதும் அதனுள் கனவுகள் காண்பதும் எவ்வாறு கூடும், என்ற ஐயந் தோன்றலாம். நாம் இரவில் தூங்குவது, தூக்கத்துள் தூக்கம்; அந்தக் கனவும் கனவினுள் ஓர் கனவு. கனக்கண்டதாகவும் அதனை இன்னொருவருக்குச்சொன்னதாகவும் கனவே கண்டுள அனுபவம் சிலருக்கு நேர்ந்திருக்கலாம். எனின், கனவிற்குள் கனவுகாண்பதும் இயலாததன்று. இன்னபடியாவுமே கனவென்பதைக் கவி வற்புறுத்தி இவ்வுலகவாழ்க்கையில் சுகம்போல் தோன்றுகின்றவைகளைக் கொண்டாடி மகிழாமலும், துக்கம்போல் தோன்றுகின்றவைகளுக்கு ஆற்றாமல் வருந்தாமலும், இறப்பதொன்றே நிச்சயம் என்பதை நினைத்து, அதன்பின் பரகதி அடைந்து உய்வதற்குத் திருவரங்கனைக் கண்டு வாழ்த்திக் காலம் கழிக்குமாறு நம்மை அழைக்கின்றார்.

அவ்வாறு அழைக்கும்போது அரங்கனுடைய அருளின் திறத்தை எடுத்துக் காட்டக் கண்டாகர்ணனுடைய கதையைக் குறிப்பிடலாகின்றனர். கண்டாகர்ணன் என்பவன் பாரதப்போர் நடந்த காலத்தில் வசித்தவன் ஒருவன். இவன் சிவபக்தன். விஷ்ணுவை முற்றிலும் வெறுத்துப் பகைத்திருந்தனன். அரியின் பேர் தன் காதிற்கேட்டாலும் பாவம் என்றகொள்கையன். ஆதலால், கோவிந்தா, கிருஷ்ணா, ராமா, என்று பிறர் அழைப்பதும் பேசிக்கொள்வதும் தன் செவியில் நுழையப்படாதென்று, இரண்டு காதிலும் இரண்டு பெரிய மணிகளைக் கட்டிக்கொண்டு அவைகள் செய்யும் ஒலியால் அரிநாம மொழிகள் கேளா வண்ணம் தடுத்துவா லாயினான். (கண்டாகர்ணன், என்பது காதில் மணிகள் கட்டிக்கொண்டிருப்பவன் என்று பொருள்படுமாகையால் இது இவனுக்குக் காரணப்பெயர் ஆயிற்று.) விஷ்ணுவை இவன் இவ்வளவு வெறுத்திருப்பதுடன் விரும்பிச் செய்த சிவபூஜைக்கும் அளவில்லை யானாலும், இவன் இறந்தபின் இவனது ஆன்மாவைக் கைலாசத்திற் கழைத்துச் செல்லச் சிவகணங்கள் வரவில்லை. வைகுந்தவாசிகளே இவனது ஆன்மாவை அழைத்துப்போக வந்தனர். இதுகண்டு வியப்பும் வியாகுலமும்அடைந்தஇவனது ஆன்மா இவ்விபரீதத்தின் காரணத்தைவினவக் கிருஷ்ணனிடம் வந்து சேர்ந்தது. அப்பொழுது கிருஷ்ணன், "கண்டாகர்ணா, என்னை நீ பகைத்ததும் சிவபூஜை செய்ததும் உண்மையே. ஆயினும், என் பேர் கேட்டுவிடப்போகின்றதே என்று எப்பொழுதும் பயந்திருந்த நீ இடைவிடாது என்நாமத்தை எண்ணி இருந்தாய். உன்காதின் மணி அடிக்குந்தோறும் நீ நினைத்தது என் நாமத்தையே. நோக்கம் எதுவானாலும் என்னை நினைப்பவர்கள் என் பக்தர்களே; எப்படியானாலும் மனிதர் என்னை நினைத்தால் போதும்" என்று கூறினார். இதுகேட்ட கண்டாகர்ணன், பகையால் நினைத்தவரையும் வெறுக்காது ஏற்றுக்கொள்ளும் கண்ணனது கருணையைக் கண்டு மனமுருகி விழிநீர்வழிய, "அருட்பெருங் கடவுளே, எனக்குமோர் கதி நீ நல்குவாயோ" எனவேண்ட, கிருஷ்ணன், "கண்டாகர்ணா இப்பொழுதே நீ வைகுந்தம் சென்று வாழ்க" என வரமளித்தான். இவ்விதம், தன்னை வெறுத்தவருக்கும் நற்கதியளிக்கும் பரமனை நாம் கண்தகக் கண்டு நா இன்புற வாழ்த்தி வருவோமாயின் பரமபதம் பெறுவதில் ஐயமுண்டோ, என்று கவி காட்டுகிறார்.

---

வாராக வாமன னேயரங் காவட்ட நேமிவல
வாராக வாவுன் வடிவுகண் டான்மன் மதனுமட
வாராக வாதரஞ் செய்வனென் றாலுய்யும் வண்ண [மெங்கே
வாரக வாச முலையேனைப் போலுள்ள மாதருக்கே. 11

பதப்பிரிவு:—வாராக வாமனனே அரங்கா வட்டம் நேமி வலவாராகவா உன் வடிவு கண்டால் மன்மதனும் மடவார் ஆக ஆதரம்செய்வன் என்றால் உய்யும் வண்ணம் எங்கே வார் ஆகம் வாசம் முலையேனை போல் உள்ள மாதருக்கே.

பதவுரை

வாராக=வராக அவதாரம் எடுத்தவனே; வாமனனே=வாமனனாகத் தோன்றினவனே; அரங்கா=அரங்கநாதனே, வட்டம்=வட்டமான, நேமி=சக்கரங்களுடையதேரை அர்ச்சுனனுக்காக ஓட்டிய,வலவா=பாகன் ஆன கிருஷ்ணனே; ராகவா=ரகுவம்சத்தில் ராமனாகப் பிறந்தவனே; உன்=உனது, வடிவு=அழகை, கண்டால்=பார்த்தால், மன்மதனும்=அழகிற் சிறந்தவனும் மற்றவர்க்குக் காமம்மூட்டுகின்றவனுமான மன்மதனுங்கூட, உன்னை அணைத்துச் சேரும் பொருட்டு, மடவார் ஆக=பல பெண்களாக மாறிக் கொள்ளவேண்டுமென்று, ஆதரம்செய்வன்=ஆசைப் படுவான், என்றால்=என்றால், வார்=கச்சு அணியப் பெற்று,ஆகம்=மார்பில், வாசம்=வாசனையுடைய சந்தனம் முதலிய பூசியுள்ள, முலையேனைப்போல்=முலைகளையுடைய என்னைப்போல், உள்ள=இருக்கின்ற, மாதருக்கு=பெண்களுக்கு, உய்யும் வண்ணம்=பிழைக்கும் வழி, எங்கே=எவ்விடத்தில் உளது.!

கருத்து:—'அரங்கனது அழகிற்குஆளாகி மன்மதனும் பெண்ணாக வேண்டுமென்று பேதுறுவான் என்பது நிச்சயம். அவ்வாறிருக்க, தானும் தன்போன்ற மாதர்களும் அவ்வரங்கனது வடிவைக் கண்டபின் நாணம் நிறை முதலியவைகளைக் காத்துக்கொள்வதென்பது கூடுமோ' என்று கவி, கடவுள் யாவரையும் தன்வயம் ஆக்கிக்கொள்ளுந் தன்மையைப் பாராட்டுகின்றார்.



விளக்கம்:—வாராகவா, என்பன யமகமாய் வந்திருக்கின்றன. இவை முதலடியில், வாராக வா(மனனே) எனப்பிரியும். இரண்டாம் அடியில், வாராகவா, எனப்பிரியும். இதனில் முதலில் உள்ள, வா என்பது முதலடியின் ஈற்றிலுள்ள 'வல' என்பதோடு சேர்ந்து, 'வலவா' என்ற எட்டாம்வேற்றுமைச் சொல்லாகின்றது. வலவன், என்பதற்குத் தேர்ப்பாகன் என்பது அர்த்தம். எட்டாம் வேற்றுமையில், ராமன் - ராமா, கண்ணன் - கண்ணா, என்று ஆவது போல், வலவன் என்பது வலவா (தேர்ப்பாகனே) என்று ஆயிற்று. நேமி என்பது தேர்ச்சக்கிரம்; அது இங்குத் தேரைக்குறிக்கின்றது. அல்லது, நேமிஎன்பதைச் சக்கிராயுதம் என்றே கொண்டு, வலவா என்பதற்கு வல்லமை உடையவனே, எனப் பொருள் கூறலாம். சக்ராயுதத்தைச் செலுத்துவதில் வல்லமை உடையவனே, என்று திருமாலை அழைத்தபடியாகும் அல்லது, வலவா, என்பதற்கு 'வலப்பக்கமுடையவனே' என்றும் கூறலாம். அப்பொழுது 'நேமிவலவா' என்பது சக்ராயுதத்தை வலது கரத்தில் ஏந்தியவனே எனப்பொருள்படும். ஆயினும், கிருஷ்ணாவதாரத்தைக் குறிக்கும்படி 'வலவா' என்பதற்குத் தேர்ப்பாகனே என்று பொருள்கொள்வது நன்கு பொருந்தும்.

மூன்றும் அடியில்—வார் ஆக ஆ(தரம்) எனப்பிரியும். இதனில் வார் என்பது இரண்டாம்அடியீற்றிலுள்ள மட என்பதோடு சேர்ந்து 'மடவார்' என்ற சொல் ஆயிற்று. ஆக, என்பது ஆவதற்கு என்னும் பொருளுடைய வினையெச்சம். அடுத்த,ஆதரம் என்னுஞ் சொல்லின் முதல்எழுத்தாகிய 'ஆ' என்பது வகர உடம்படுமெய்யின்மேல் ஏறி 'வா' என நிற்கின்றது.

நான்காவது அடியில்—வார் ஆக வா(சம்) எனப்பிரியும். வார் இறுகியமார்பில் வாசனையுடைய முலைகளைத் தாங்கும் என்போன்ற மாதர், என்பது அவ்வடியின் பொருள்.

## இலக்கணம்

உடம்படுமெய்கள் வந்து புணர்கின்ற இலக்கண விதிகள் இதுவரையில் கற்றனவற்றை மறவாதிருந்தால், தமிழ் எழுதும்போது சிற்சில பிழைகள் நேராமல் காக்கலாம். உதாரணமாக, 'அவன் யிங்கே வரவில்லை' என்றும், 'நான் காண யில்லை' என்றும், 'கடவுள் யெங்கும் இருக்கின்றார்' என்றும்; "இது யேன் வீடு" என்றும் "யேன், நீ கடிதம் அனுப்ப யில்லை" என்றும் பலர் எழுதக் காண்கின்றோம். இவ்வுதாரணங்களில் யகரம் வந்திரப்பது அத்தனையும் பிழை. இந்தப்பிழை எப்படி வரலாகின்றது என்பதையும் எளிதில் தெரிந்துகொள்ளலாம். 'அவனை யிங்கே அழைத்துவா' என்றும்; 'அரசி யெங்கு இருக்கின்றாள்' என்றும்; 'பொன்னை யெனக்குக் கொடு'என்றும்; "நீ யேன் வரவில்லை"என்றும் புஸ்தகங்களில் வந்திருக்கக்காண்கின்றனர்.கண்டு,'அவனை யிங்கே'என்று எழுதுவது சரியானால் 'அவன் யிங்கே'என்று எழுதுவதும் சரியாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைக்கின்றனர். 'நீ யேன்' என்பது சரியானால், 'யேன் நீ' என்று ஏன் எழுதப்படாது என்று எண்ணுகின்றனர். இதுவுமன்றி ஆனை—யானை, ஆறு—யாறு, என இரண்டுவிதமாகவும் சில சொற்கள் வழங்கப்படுவதும் அவர்தம் கண்களுக்குத் தென்பட்டிருக்கும். இவைகளின் இலக்கணம் தெரியாததால், கண்ணிற்குத் தோன்றுவதையே நம்பி எந்த உயிர்எழுத்திற்கும் பதிலாயும் யகர உயிர்மெய் வந்தாலும் வரலாம் என்று முடிவுசெய்துகொள்ள நேர்கின்றது.

ய, யா யி யீ யு யூ யெ யே யை யொ யோ யௌ என்ற வரிசையில், யி யீ யெ யே யை யொ என்ற ஆறுஎழுத்துக்களும் மொழிக்கு முதலில்ஒருபோதும் வாரா. மற்ற எழுத்துக்களிலும் யானை யாவன் யாங்கு, யாப்பு, என யா என்னும் எழுத்தைத் தவிர மற்ற (ய யு யூ யோ யௌ என்னும்) ஐந்து எழுத்துக்களை முதலாகவுடைய சொற்கள் சமிஸ்கிருத வார்த்தைகளாகவே யிருக்கும். ஆகையால், யிவன், யேன், யெமக்கு, என்பன மொழியின் சரியான உருவங்களல்ல—இவன் ஏன் எனக்கு, என்பனவே அவைகளின் சரியான உருவங்கள். எனவே, யிவன், யேன் யெமக்கு, என்று எழுதப்பட்டிருக்குமானால், முதலில் இருக்கிற யகரங்கள் உடம்படுமெய்களாக வந்து அவைகளின்மேல் இம்மொழிமுதல் உயிர்கள் ஏறியனவாகவே இருத்தல்வேண்டும். யகர உடம்படுமெய் வரக்கூடிய இடங்கள் இப்பொழுது தெரியுமாகையால், இத்தகைய பிழைகளிலிருந்து காத்துக்கொள்வது இனி எளிது. அவன்+இங்கே, என்று சேரும்போது, நிலைமொழியிறுதியில் ன் என்னும் மெய்யெழுத்து இருப்பதால், அதன்மேல் வருமொழி முதல் உயிர் ஏறி 'அவனிங்கே' என்று ஆகக்கூடுமேயொழிய, யகர உடம்படுமெய் பெற்று அவன்யிங்கே என்றாக இயலாது. 'நீ யேன்' எனவரும்; ஏனெனில், நிலைமொழி ஈ என்னும் உயிரில் முடிவதால், வருமொழி முதலில் ஏ என்னும் உயிர் வர, இடையில் யகர உடம்படுமெய் வந்தது ஆனால் 'யேன் நீ' என வாராது. ஏன் என்பது பதம்; அதுவே முதலாக இருக்கும்போது அதற்குமுன் உடம்படுமெய் வரக் காரணம் இல்லை.

இனி, 'போயிருந்தான்,' என்றும்,'காயிலை'என்றும் வருகின்ற இடங்களில், 'போ,கா' என்ற ஓகார ஆகாரங்களுக்குப்பின் (வகரத்திற்குப்பதிலாய்) யகர உடம்படுமெய் வந்திருக்கின்றனவே என்று மயங்கவேண்டா. இவைகளின் முதற் சொற்கள் போ, கா என்பனவல்ல. அவை, போய் காய் என்பனவாகும். ஆகையால், போய்+இருந்தான்=போயிருந்தான், என்றும், காய்+இலை=காயிலை, என்றும்,நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறி யிகரங்கள் ஆயின—அந்த யகரம் ஆகையால் சொல்லோடு சேர்ந்த மெய்எழுத்தேஅன்றி உடம்படுமெய்யாக வந்தது அன்று. வகர வரிசையில், வு வூ வொ வோ என்ற நான்கு எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வாரா. வ வா வி வீ வெ வே வை வௌ என்ற எட்டு எழுத்துக்களும் வரும். ஆகையால், சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி மொழிக்கு முதலில் உள்ள வகரம், உடம்படுமெய் ஏறியதாகவாவது அல்லது

வார்த்தையையே சேர்ந்ததாக வாவது கொள்ள வேண்டும். உதாரணம்—'பூவிலை', என்பது பூவும் இலையும் எனப் பொருள்பட வேண்டுமானால், பூ+இலை என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து ஆனதாகும். ஆனையால், அந்த வகரம், உடம்படுமெய். அல்லது பூவினது விலை (கிரயம்) என்பது பொருளானால், வகரம் உடம்படுமெய் ஆகாது. அப்படியே, ஆவென்றான் என்பது, ஆ+என்றான், பசுவென்று சொன்னான், என்றும் ஆ+வென்றான் பசுவைச் செயித்தான் என்றும் பொருள்படக் கூடும்.

# நம்மாழ்வார் விபவம்.

## நம்மாழ்வாரின் கல்விகேள்விப் பயிற்சி.

852 பக்கத் தொடர்ச்சி.

இவர், தன் காலத்தில் தென்திசைக்கெல்லாம் ஒரு திலகமாக விளங்கியபிரசண்டதமிழ்ப்புலவராகத் தன்னைத்தானே நன்கு மதித்திருந்தாரென்பதற்கு ஐயமில்லை. தன் போலியராகிய மற்றப் புலவர்களைத் திருமாலுக்குக் கவி பாடுவதில் "நும் உயிர்காத்து ஆட்செய்மின்" என்றும், தானவ்வாறு யோககரணம் தப்பினதால் "என் நெஞ்சும் உயிரும் உள்கலந்து நின்றார் அறியாவண்ணம் என் நெஞ்சும் உயிரு மவையுண்டுதானேயாகிநிறைந்தானே" என்றும் முறையிடுகிறார். மூன்றாம் திருவாய்மொழி ஒன்பதாம் பத்தில் தன் கவிக்கு ஒருவனே உரியனென்று கூறுகிறார்.

"சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் [கேள்மினோ
என்னாவி லின்கவியா னொருவருக்கும் கொடுக்கிலேன்
தென்னாதென்னாவென்று வண்டுமுரல் திருவேங் கடத்து
என்னானை என்னப்பன் எம்பெருமான் உளனாகவே"

மற்றப் புலவர்களுக்குப் "புலவீர்காள் இழியக் கருதி ஓர்மானிடம் பாடுதல் என்னாவதே" என்று உபதேசிக்கிறார். "என் வள்ளல் மணிவண்ணன் தன்னைக் கவிசொல்ல வன்மினோ" என்று அழைக்கிறார். "மாய மனிசரை என் சொல்ல வல்லேன் என் வாய்கொண்டே" என்று தம் சித்தாந்தத்தை அறுதியிட்டுப் பின்னர், புலவர்களுக்குப்பிழைக்கவழிவேணுமேஎன்று தம்மைத்தாமே உசாவிக்கொண்டு "இம்மண்ணுலகில் செல்வர் (Patrons) பொருள் உதவி படைப்பார் இப்போதில்லை நோக்கினும் வம்மின் புலவீர்மெய் வருந்திக்கைசெய்துஉய்மினோ" என்றுபிழைக்கவழிகாட்டுகிறார்(A solution of the problem of the unemployed intellegentia by their taking to industrial pursuits.)இவர்மனிதிதர்களுடன்கல்விசெய்துகற்றறிந்தவரல்லர்; திருமாலினருளால் எல்லாம் உணர்ந்தவர்,என்று வைணவர் சொல்லும் சம்பிரதாயம் இவர் ஏற்றம் குறித்தற் பொருட்டே. முதல் இவர் திருவாய் மலர்ந்தருளிய திருவிருத்தம் இவர் தமிழ்நாட்டுப் புலமையின் போக்கு வரலாற்றை யனுசரித்துத் திணை துறைகளடங்கிய பிரபந்த ரூபமாய் வாய்ந்தது. அவர் தம் காலத்திற்கு முன்னுற்ற தமிழ் நூல்கள் யாவையும் பயின்று அவைகளின் சவரூபங்களையே தன் இலக்கியங்களுக்குத் துணைக் கருவிகளாகக் கொண்டுளார். ஒவ்வோர்பிரபந்தங்களின்விமர்சத்திலும்இதைப்பற்றி ஆங்காங்குப் பின்னர்க் குறிப்போம். வேதாந்தார்த்தங்களையே கூறிய நூல்கள் இவர் காலத்து உலாவியது ஐந்து. பொய்கையாழ்வார் முதல்திருவந்தாதி, பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதி, பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதி, திருமழிசை ஆழ்வார் திருச்சந்தவிருத்தம், இவ்வாழ்வார் நான்முக திருவந்தாதி. இவைகளுக்குத் திணைதுறைகள் சம்பந்தம் யாதொன்றும் கிடையாது. இந்நாலாழ்வார்கள்சமகாலத்திலிருந்தாரென்பது ஐதீகம். இவர்கள் நூற்றாண்டுக் கணக்குகளில் ஜீவித்திருந்தார்களென்பது வைணவர்களின் கொள்கை. இவ்வைந்து நூல்களின் சாயை இவர் பிரபந்தங்களில் எங்கும் உலாவக் காணலாம். தவிர இவர்ஸ்ரீமத் ராமாயணம் மஹாபாரதம்நன்றாகத் தெரிந்துளார். பாகவதம் இவருக்கு ஹிருயங்கமமான அரும்பிரபந்தம். இரண்டாம் திருவாய்மொழி "வாயும்திரையுகளும்" என்ற தசகத்தில் திருமாலின் நசையால் பண்பற்று உருவிழந்ததாக அவ்வவைகளின் இயற்கையேகொண்டு நிரூபித்திருக்கின்ற ஏழு உலோகங்களில் மூன்று ஸ்ரீமத் பாகவதத்தினின்றும் எடுத்துள்ளனவாகத் தெரிகின்றது. ஸ்ரீமத் பாகவத திவ்விய சரித்திரங்களே இங்கும் அங்குமெங்கும்இவர் நூல்களில் செறிந்து கிடக்கின்றன. பகவத்கீதையும் இவர் ஐயம் விபரீதமில்லாமல் கற்றறிந்த கிரந்தங்களில்முதன்மைப்பட்டது. ஸ்ரீவிநாயகபகவான் வேதாந்திர சூத்திரங்களும் இவர் கேட்டோபடித்தோ தெரிந்தவைகளே.உபநிஷத்துக்களின்கருத்துக்களை அக்காலத்துள்ள வைதீக பிராமணர்களைக்கொண்டு இவர் நன்றாய் ஆராய்ந்து அவற்றின் உண்மைகளில் துணிவும் தெளிவும்பெற்றுப் பிறர்க்குஉபதேசிக்கவும் வல்லவரானார். இவர் கற்றுங் கேட்டும் உணராததெல்லாம் இவர் ஆராய்ச்சிக்கும் புத்திநுண்மைக்கும், ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்குச் சாஸ்திரங்களை ஸாந்தீப மகாமுனிவர் ஞாபகம் மூட்டியதுபோல், தாமாகவே வந்து வாய்ந்தன. அறியாக் காலமாகிய இளம்பருவத்திலேயே தாஸ கைங்கரியத்தில் பகவான் தன்னை முட்டி விட்டார், என்பது இவர் சுவய பாசுரம். இப்படி இவரைத் திருத்தியதற்கு முக்கியமாய் முதல் நாலு ஆழ்வார்களின் திவ்விய பதிகநிதிகளே நிலைநின்ற காரணமா யிருந்தனவென்று நாம் துணிந்துரைக்கலாம். இவர் காலமுறையில் ஐந்தாவது ஆழ்வார். இவர்களில் திருமழிசைபிரான், கும்பகோணமென்கிற குடந்தையில் சமாதிநிலை பெற்றார். இவர் நெடுங்காலம் குடந்தை க்ஷேத்திரத்தில் நில்ஸாக்கராயிருந்தாரென்று தெரியவருகிறது இவர் மகிமையைக்கூறும் விருத்தாந்தங்களில்ஒன்று இவ்விடம்உரைக்கப்பாலது. இவர் தம் பாசுரம் ஒன்றில் குடந்தையில் கிடக்கும் ஆராஅமுது என்ற பெயரிடப்பட்டு விளங்கும் ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமியை "எழுந்திருந்து பேசு" என்று வினவினார். பக்தபாரவசியனைகருணாநிதியும் படுத்துச்சயனம்பண்ணுவதைவிடுத்து இவர் வேண்டுகோளுக்கிணங்கி எழ எத்தனித்தாரென்றும் அதினால்தான் ஆராவமுதர் "உத்தான சாயி"யாய் நாளது வரைக்கும் பக்தர்



களுக்கு ஸேவை சாதிக்கிறாரென்றும் ஆபதிகர்கள் கொள்கை. திருவாய்மொழி 5-ம் பத்து 9-ம் பதிகத்தில் "திசைவில் வீசும் செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை" என்ற வாக்கியத்திற்கு எல்லா உரைகாரர்களும் இது திருமழிசைபிரானைப்பற்றி உபசார ரீதியாகப் பன்மையில் சொன்னது, என்று வரைந்திருக்கிறார்கள். மேல்பாசுரங்களிலும் (1) "வாழ்தொல் புகழார் குடந்தை (2) "நலத்தார் மிக்கார் குடந்தை கிடந்தாய்" என்று இப்படி புகழ்வாய்ந்தவரைப் பன்மையாக ஓதியிருப்பதால் இ க்ஷேத்திரத்திற்குத் திவ்விய யாத்திரைகொண்ட முதல் மூவாழ்வாரும் திருமழிசைபிரானுமே ஆழ்வார் குறித்துள்ளார் என்றசொல்லத் தட்டில்லை. திருமழிசை பிரான் நூல்களே இவ்வாழ்வாரைத் தெய்வப்பகுதியாக்க முதற்காரணம். ஏனென்றால் இவர் உண்மை ஆராய்ச்சிக்குப் பாடுபடுவராய் அவர் காலத்தில் நடைபெற்ற சாங்கியம் பௌத்தம் ஜீனம் சைவம் முதலான நூல்களில் அவ்வவ் வாசிரியர் இடத்தில் படித்ததுப் பிறகு ஆற்றாமைபற்றி வைணவத்திலும் விசிஷ்டாத்துவைத மதத்திலும் இறங்கினவர். இவர் வாக்கின் பௌர்ஷமும் ஒப்பிலாத் தோற்றமும் புறம்பே கிடக்கும் ஆர்ஜவமும் (Evident sincerity) உண்மைப் பாடுபடுகிறவர்கள் மனத்தில் ஐயந்திரிபு நீங்கத் தோற்றத்தக்கன. இவர் தம்மைப்பற்றிக் கூறிக் கொள்ளும்போது துணிவுள்ள செந்நாப்புலவர் என்பர். சாங்கிய மதத்தில் நிரீசுவர சாங்கியம்-ஸேஸ்வர ஸாங்கியம் என இரண்டு கிளைகள்உள. ஈசுவரனில்லை என்னும்மதம் பற்றாசாகவுள்ள பற்றுக்கோல் ஒன்றின்மையின் யாவருக்கு முணரலாகாது. ஈசுவரனை ஒப்புக்கொண்ட ஸாங்கியமதத்திலும் ஜீனமதத்திலும் ஒருவன்உளனாகத் தீர்ந்தாலும் அவன்கேவலம் ஞானச்வரூபன் பக்திபிரேமாதிகளுக்கு அகப்பட்டால் அவனின் சுத்த ச்வரூபத்துக்கு ஒளிமாழ்கை சம்பவிக்குமாதலின் யாவர் அறிவுக்கும் ஸவஸவரூபத்தோடு விளங்கத்தக்கவனல்லன். பௌத்தமதம் சாஸ்த்திரத்தால் ஈசுவரனை ஒப்புக்கொள்ளாமையால் அவனைத் தேடித்தேடி முடிவுபெற இயலாமையிலேயே முடியும் யுக்திகளும் புத்திகளும் அனந்தமாகையால் இன்றைக்குத் தேர்ந்தாலும் நாளைக்குச் சிதைந்துடையும். திருமழிசையாழ்வார் இவ்விபரங்களைக் கருத்துட்கொண்டு சுருக்கமாய் "அறியார்சமணர் அயர்ந்தார் பவுத்தர்" (Got wearied in their search) என்றார். விஷ்ணுபாரமியத்தை மார்க்கண்டேயன் பாணாசுரன் கண்டாகர்ணன் இவர்கள் கடைசியில் திருமாலை வழிப்பட்டே அருள்பெற்றாரென்பதினால் "தேருங்கால் தேவன் ஒருவனே என்றுரைப்பர்; ஆருமறியார் அவன்பெருமை. ஒரு பொருள்முடிவும் இத்தனையே, எத்தவம் செயதார்க்கும் அருள்முடிவ தாழியான்பால்" என்று நான்முக திருவந்தாதியில் இவர் பாடினார். விசிஷ்டாத்வைத தத்துவத்தை "நான்உன்னை அன்றி இலேன் கண்டாய்; நாரணனே நீ என்னையன்றி இலை" என்று சுருக்கிக்கூறியுளார். நம்மாழ்வார் தம் பிரபந்தங்களில் பரக்கப்பேசும் விஷயங்களுக்கு இவர் நூல்கள் ஒருவாறு அடிப்படையேயாகும். அதிகம் எடுத்துக்கூறினால் விஷயம் விரியுமாயினும் சிற்சில குறிக்கத்தக்கன. "வீடாக்கும் மெய்ப்பொருள் தான் வேதமுதற்பொருள்தான் விண்ணவர்க்கு நற்பொருள்தான் நாராயணன்"; "நீயே உலகெல்லாம் நின்னருளே நிற்பனவும் நீயே எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத்து இருசுடருமாய இவை"; 'பல்லுயிர்க்கும் ஆக்கை கொடுத்தளித்த கோனே குணபரனே உன்னைவிடத் துணியார் மெய் தெளிந்தார் தாம்' இவர் தேற்றந் தெளிவுக்கு மற்றொரு உதாகரணமாய் நான்முக திருவந்தாதிக் கடைசிப் பாசுரம் வரைவோம்.

"இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்
இனியறிந்தேன் எம்பெருமான்! உன்னை இனி [யறிந்தேன்
காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரிசை
நாரணன்நீ நன்கறிந்தேன் நான்"

இனி இவர் பிரபந்தங்களைத் தனித்தனியே விசாரிப்பதற்குமுன் பொதுவாய்ச் சிலவற்றை முதலில்குறிப்போம்.

189079

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

## 19. உலாவியற் படலம்.

### தெய்வத் தையமு மார்த்தியு மெய்தினர் செய்தி.

856-வதுபக்கத் தொடர்ச்சி.

பரமனென்ற பான்மையில் இராமனை அம்மிதிலை மாதர் அன்று பாராட்டினரே யன்றிப் பரத்தைப் புத்தியால் பேதுறவெய்தினரலர் என்பதற் காதாரமாய்க் கம்பர் தனதாற்ற லனைத்தையுஞ் செலுத்தி யமைத்த செய்யுள்கள் பல இப்படலத்தின்கண் காணலாம். கடவுளென்ற கொள்கையை மாந்தர் மதித்தளக்குந்தன்மை பற்பல திறத்தன. இத்திறத்தினரு ளொருசாரார், "மனிதர் கடவுளின் படைப்போ, மற்று மனிதர்தம் கற்பனையே தானோ கடவுளென்பது" என ஒருபாற்படா தூசலாடுவார். கடவுளின் மேதகு குணங்களை நினைத்து நினைத்து அவ்வழிப் படுவதால் மனிதர் தெய்வத்தன்மை யடையலாம் என்னற்கு எதிராய், மனிதர் தம்முடைய உயர்ந்த குணங்களையெல்லாம் சிந்தித்து ஒன்றாய்த் திரட்டி இக்குணங்களைக் கடவுள் பெற்றிருக்கின்றாரெனக் கருதினுங் கருதலாமென ஐயுறவியலும். மனிதரனைவரும் ஓரினத்தவரேனும் மனநிலை அடைந்துள வளர்ச்சியில் ஒருபடித்தானவரல்லர். விருப்பு வெறுப்புக்களின் வகையிலும் உணர்வின் நுண்மையிலும் மனிதருக்குள் வேறுபாடு பெரிதுந் தோன்றுகின்றது. அவரவர், கடவுள் என்று கொண்டாடுந் தெய்வத்தையும் அத்தெய்வத்தை வழிபடும் முறைகளையும் உற்றுநோக்கினால் அவ்வவர் மனதின் அளவளவெண அக்கடவுள் ஆவது

புலப்படும். ஊனும் தேனும் விழைந்துண்ணும் வேடர்கள், தம்தெய்வம் ஊனும் தேனும் உகக்கின்றதென எண்ணி அளிக்கின்றனர். உயிர்க்கொலையே தொழிலாகவுடைய அன்னவர்தெய்வம் சிவந்தவிழியும் பிளந்த வாயுமாய்க் குரூர உருவம் பெற்றிருக்கவே அவர் புத்திக்கு எட்டுகின்றது. பூவும் மணமும் பாலும் பழமும் இனிதென உவக்கும் நிலையுடைய மக்கள், தங்கள் கடவுள் விரும்புவனவும் அவையேயென்று பூசனை புரிகின்றனர். இவர் கருத்திற்கிசைந்தபடி திருவுரு வமைந்து ஆடை யணிகலங்களால் பொலியும் கடவுளே இவர்களுக்கு ஏற்றதாகின்றது. மனிதர் தங்களுடைய கட்டளையை மீறிநடப்பவர்களைக் கோபித்துத் தண்டிக்கின்றனர்; அப்படியே கடவுளுங் கோபித்துத் தண்டிப்பாரென நம்புகின்றனர். அன்பிற்கு மருளிற்கு வயமான உள்ளநிலை யுடையவர் தங்கள் கடவுள் அன்புமயமானவரென்றும் அருளுருவங் கொண்டவரென்றுங் கூறுகின்றனர். இதன்மேல், எவ்வித விருப்பும் எவ்வித வெறுப்பும் அற்ற தூய்மையோர், தம்நிலைமைக் கேற்பத் தங்கள் கடவுளை 'வேண்டுதல் வேண்டாமை இல்லாதான்' ஆக்கிவைக்கின்றனர். அன்னவர் கடவுளிற்கு, உருவமில்லை குணமில்லை; அது இல்லாத இடமில்லை. ஆதலின் மனிதர் மதி முதிரமுதிரக் கடவுளின்கதியும் உயர்ந்து கொண்டே போகின்றது. எனின், கடவுள் மனிதரைப் படைத்து வளர்க்கின்றார் என்பதனினும், மனிதரே கடவுளைப் படைப்பவரும் வளர்ப்பவரும் ஆகின்றன ரென்றுரைத்தலே ஒக்கும் என்பாருமுளர். அமெரிக்காவில் ஐம்பதறுபது ஆண்டுகளுக்கு முன் இருந்த இன்கர்ஸால் என்றவோர் நாஸ்திகன், "கடவுள் மனிதனைப் படைத்ததில்லை, மனிதனே கடவுளைப் படைத்தான்; மனிதன் முன்னேறவேறக் கடவுள் மேன்மையுறலாகின்றது (God has not created man, man has created God; and God improves as man advances)" என்றுவிளம்பினான்.

உள்ளுற உதித்துத் திகழ்கின்ற உணர்வினா லன்றிப் புத்தியின் உதவியைக்கொண்டு தர்க்கத்தின் மூலமாகக் கடவுளை ஆராய்ந்தறியப் புகுவோர் யாவர்க்கும் இவ்வித ஐயம் விளைவது இயற்கையே. இந்த ஐயத்திற்கு எதிராய்ப் பீஜாங்குரம் போன்ற நியாயங்கள் நெடுநேரம் நிற்கமாட்டா. தர்க்கத்தால் கடவுளை மறுக்கப் புகுவதும், நிறுவப்புகுவதும் இரண்டும் ஒருபடித்தே.

கடவுள் தன்னைப்போல் மனிதரை ஆக்கினான் என்னாது, மனிதர் தாம் தம்மைப்போல் கடவுளை ஆக்கினர் (anthropomorphic conception of God) என்னுமிவ் வழக்கைக் கம்பர் கருத்திற்கொண்டு,

பஞ்சணி விரலி னார்தம் படைநெடுங் கண்களெல்லாம்
செஞ்சவே யையன் மெய்யிற் கருமையைச் சேர்ந்த
[வோதாம்
மஞ்சன மேனி யான்றன் மணிநிற மாத ரார்தம்
அஞ்சன நோக்கம்பார்க்க விருண்டதோவறிகிலேமால்

[செம்பஞ்சுக் குழம்பை அணிந்த விரலுடைய மாதர்களது வேலும் வாளும் போன்ற பெரியகண்கள்எல்லாம் (கருநிறமுடைய) இராமனது மேனியை (உற்றுப் பார்த்ததால்) நன்றாகத் தாமும் கருநிறம் பெற்றனவோ; அல்லது, அம்மாதர்கள் மைதீட்டிய (கரிய கண்களின்) பார்வையால் பார்த்ததால் மேகம்போன்ற சரீரமுடைய இராமனது அழகியநிறம் கறுப்பு ஆயிற்றோ, எமக்குத் தெரியவில்லை]

என்று பாடுகின்றனர். 'காரிகையார்கண்கள் இராமன்திருமேனி என்னும் இவை யிரண்டில் எதனின்று கரியதன்மையை எது பெற்றதென்பதறியே' னென்றுரைக்கும் இப்புலவர், உலகிற் சிலர்பாலுற்றெழு மையத்தைத் தன்மேற்பூண் டுரைத்தாரன்றித் தன்மதம் இதுவென நிறுவினா ரலர். அண்ணல் நிறமும் மாதர்கண்களும் இரண்டும் தனித்தனி கருமையாயிருத்தலால் இவ்வண்ணம் அயிர்க்க நேர்ந்தது. ஆதலின், இவ்வாசகம் அறியாமையை விளம்புவதுபோல் அமைந்திருப்பினும், பரமான்மாவும் ஜீவான்மாவும் இவ்வண்ணம் ஒரு தன்மை வாய்ந்தனவாதல்பற்றி ஒன்றோடொன்று எளிதில் மயங்கிக் கலக்கலாகும் உண்மையையே கம்பர் அறிவுறுத்துகின்றனர். இவ்வகை ஐயத்திற் கிலக்கா யிருப்பதும் கடவுள் தத்துவத்தின் ஒருகூறு ஆகின்ற இலக்கணத்தை எடுத்தியம்புமாற்றால் இராமனது பரத்துவம் இங்குச் செவ்விதின் பாராட்டப் பெறுகின்றது

கடவுள்திறத்தில் இத்தகைய ஐயங்கொண்டிருப்பவர் சிலர் தர்க்கமுறைகளால் அவ்வையத்தை நீக்கித் தெளிதற் காற்றாராயினும், அவர் உள்ளுணர்வு ஒவ்வோர்நிலையில் ஓங்கியெழுதலால் "கடவுளென்னுமித்தத்துவம் மெய்யாயினும் ஆக, மற்று மாநுடர் முயன்றுசெய்த கற்பனையாயினும் ஆகுக. அத்தத்துவ உணர்ச்சிக்கு ஆளானோர் உய்வர்" என்னும் கொள்கையராதலு மியல்பு. அவ்வியல்பிற்கு இலக்காயிருத்தலும் பரம்பொருள்நிலைகளில் ஒன்றாவதால், அன்ன தன்மையைக் கம்பர்,

தொய்யில் வெய்ய முலைத்துடி போலிடை
நையும் நொய்ய மருங்குலோர் நங்கைதான்
கையு மெய்யு மறிந்திலள் கண்டவர்
உய்யு முய்யு மெனத்தளர்ந் தோய்வுற்றாள்.

[சந்தனக்கோலம் எழுதியதும் வெப்பமுடையதாயும் இருக்கின்ற முலைகளையும், உடுக்கைபோல் இடை மெலிந்து மென்மையான இடுப்பினையும் உடைய ஓர் பெண், தான் (காண்கின்ற இவ்விராமன்) வெறும் கற்பனையோ அல்லது உண்மையாக இருப்பவன் ஒருவனோ என்று அறியாளாயினும், "எதுவாயினும், இக்காட்சியைக் கண்டவர் உய்வார் உய்வார்," எனத் தளர்ந்து ஓய்ந்தனள்]

என்னுமோர் நிகழ்ச்சியால் விளங்கவைத்திருக்கின்றனர். உய்யும்உய்யு மெனத் தேற்றம்பற்றி இரட்டின. செய்யுமென் முற்றுப் பல்லோர்படர்க்கையில் செல்லாதாயினும், 'கண்டவர்' என்பது தொகுதியொருமையாய் இங்கு நிற்றலால் 'உய்வார்' எனும் பொருள் இச்செய்யுளில் ஏற்கக் கூடியதாகின்றது. கண்ட ஒவ்வொருவரும், ஆணாயினும் பெண்ணாயினும், உய்வார் என்று பொதுவுற உரைக்குங் குறிப்பினால் 'கண்டவர்' என்று பலர்பாலாயிற்றன்றிப் பன்மைப்பொருள் அதற்கின்றியமையாததன்று. மெய் (real) என்பதற்கெதிர்மொழியாய்க் கை(artificial) என்னுஞ் சொல் இங்கு வந்திருக்கின்றது. முன், கையோ மெய்யோ கடவுள் என்று கலங்குவார்நிலையை வகுத்த புலவர், இங்குக் கையேனும் மெய்யேனும் கடவுளென்னுங் கொள்கையைக் கருத்தினுள் பற்றியவர் எவ்வாற்றானும் உய்வர் என்ற உறுதிபெற்று விவகரிப்பவர்தம் தன்மையை விளக்கலாயினார்.



ஐயுறுவார் செய்தி அவ்வாறாக, இனிக் கடவுள் அநுபவத்தைப் பல்வேறு அளவில் எய்தினார்தம் தன்மையில் தோன்றுகின்ற வேறுபாடுகளையும், இணையிலா அறிவுடைய விப் புலவர்பெருமான், இராமனைக் கண்ணுற்ற மடந்தையர் சொல் செயல் சிந்தனைகளால் செவ்விதின் உணர்த்துகின்றனர் :—

மாதொ ருத்தி மனத்தினை யல்லதோர்
தூது பெற்றில ளின்னுயிர் சோர்கின்றாள்
போத ரிக்கட் போலன்குழைப் பூண்முலைச்
சீதை யெத்தவஞ் செய்தன ளோவென்றாள்.

[ஒரு பெண், இராமனிடஞ் சென்று அவனை அழைத்து வரத்தக்க தூது தன் மனத்தைத் தவிர வேறு இல்லாதவளாய்த் தனது இனிய உயிர் சோர்பவளாகி, "செவ்வரி படர்ந்த தாமரைமலர் போன்ற கண்களையும், பொன்னாலாகிய குழைகளையும், ஆபரணங்கள் அணிந்த முலைகளையும் உடைய சீதையானவள் இராமனை மணங்கொள்வதற்கு என்ன மகா தவம் செய்தனளோ", என்றாள்.]

இம்மடவாள்போல் சிந்திக்கும் பக்தர்கள் ஒருசிலர், கடவுளைப் புறத்தொரு பொருளென நினைத்துத் தம் மனத்தை அதன்பால் செலுத்துகின்றனர். ஆயினும், தானும் தன் கடவுளும் வேறுவேறாகி நிற்றலை நினைத்து, இன்னும், அக்கடவுள் தன்பால் வந்தெய்திக் கலக்கவில்லையே என்னும் ஏக்கம் அன்னவரைப் பற்றி யுழக்குகின்றது. இதனிடையில், தன்னையே தமர்க்குநல்குந் தனிப்பெருங் கருணையால் கடவுள், பக்தர் சிற்சிலரைச் சென்றடைந்துள சரித்திரங்களை நினைக்க, அழுக்காறாவிடினும், அவரது பெருமையைப் பாராட்டும்வாயிலாகத் தாமும் அத்தகைய பாக்கியம் செய்திலாததற்கு மிகவும் வருந்தும் உள்ளத்தராகின்றனர். அத்திறத்தினள் இங்கித் தெரிவை ஆயினாள். சரியை கிரியை அனைய புறச்சாதனங்களைக் கடந்து யோகநிலையி லிருப்பார்போல் இவளும் தன் மனத்தினை யல்லதோர் தூது பெற்றிலள். தூது பிறவாயின் அவைதம் வஞ்சனையால் இராமன் தன்பால் எய்தினானல்லனோ என்றெண்ணநேரலாம். அஃதின்றித் தன் நெஞ்சே சென்றுமவன் சேராததால் தன்னுடைய தவமின்மையே காரணமெனக் கருதுகின்றனள். செய்தவம் பெரிதுளதாயின் தூதொன்றுந் தா மேவாதபோதுமப் பரமன் தானே வந்தடைவா னென்பதைச் சீதையை இராமன் சேர்ந்ததிலிருந் திவள் தெரிந்துகொள்கின்றாள். தருமமே தன்னுடையபொறுப்பிற் றாதுசென்று வரம்பில் பேரழகினாளை மணஞ்செய்வான் இராமனை மிதிலையினகவயின் கொணர்ந்ததென்பதை இவள் ஓர்ந்திலள்போலும். பெருந்தவ மீட்டியுளள் சீதையென இவள் மதிக்க, அவளோ தன் தவமிருந்தவாறு இதற்குப் போதுமோ என்னும் புணர்ப்பினளாய், "விளைக்கலாத விற்கையாளி வள்ளன்மார்பி னுள்ளுறத் திளைக்கலாகுமாகிலான செய்தவங்கள் செய்ம்மினே" என்று பின்னும் பலதவங்கள் முயலத் தன தனங்களைத் தூண்டுவாள்.

சீதையின் தவத் தொகுதியைத் தெரிவையிவள் இவ்வாறு கொண்டாடக் கம்பர், சீதை இராமன் இவ்விருவரிற் பெரியர் யாரென அளக்கமாட்டாமை,

எண்கடந் தலகி லாதின் றேகுறு மிவன் றேரென்று
பெண்கடந் தம்மி னைந்து பேதுறு கின்ற காலை
மண்கடந் தமரர் வைகும் வான்கடந் தானைத் தான்றன்
கண்கட வாது காத்த காரிகை பெரியளே காண்

[தம்முடைய எளிமைக்கு இரங்காது அளவற்ற வேகத்தோடு இவ்விராமனது தேர் இன்று போய்விடும் என்று பெண்கள் தங்களுக்குள்ளே ஆசையால் கலங்குகின்ற சமயத்தில்—பூலோகத்தை அளந்து பின் தேவர்வசிக்கும் வானுலகத்தையும் அளந்து கடந்த அவனைத் தன் கண்விட்டு நீங்காமல் வைத்திருக்கின்ற சீதைதான் பெரியள் அல்லளோ!]

என்று உலகனைத்து மோரடிபாற் கடந்தளந்த பெருமானைத் தனதிரு கண்களில் அடக்கிவைத்த பிராட்டியின் பெருமையை ஒருபோதும்,

தையல் சிற்றிடை யாளொரு தாழ்குழல்
உய்ய மற்றவ ளுள்ளத் தொடுங்கினான்
வைய முற்றும் வயிற்றி லடக்கிய
ஐய னிற்பெரி யாரினி யாவரே

[அழகுடையவளும் சிறிய இடையுடையவளும் ஆகிய, தாழ்ந்த கூந்தலையுடைய சீதை பிழைக்கும்படி, அவள் மனதினுள் அடங்கினான் எனின், உலகம் முழுவதையும் தன் வயிற்றில் அடக்கிய இவ்விராமனின் பெருந்தகை இனி யாருளர்!]

என்று, வையமனைத்தையும் உண்டளக்க வல்ல தன் உருவத்தை, ஒருத்தி உய்யும்பொருட்டு ஒடுக்கிக் கொண்டு அவள் மனத்தினுள் அடங்கலாகிய பெருந்தன்மையை மறுபோதும் மாறிமாறித் தன்னகங் கொளப் புகழ்ந்து பூரிக்கின்றனர்.

கடவுளின்பால் நம்பிக்கை யுள்ளவர்களிற் சிலர், "தானமுந் தவமுஞ் செய்துளோம்; பூசனைகள்பல புரிந்துமுளோம்; மற்றிக் கடவுள் எம்பால் பரிவுகொண்டிலதே" என்ற வெறுப்பினால் பற்பல நினைத்தலாவது அறிவோம். அவ்வகை நினைவுகட்கு இலக்காகுங் காரணத்தாலும் வீதியிலன் றுலாப்போந்தவன் பரமனேயென்று கம்பர் வற்புறுத்த வருகின்றனர். "இரக்கந் தான் இல்லையோ ஈசனே, என்னைக் கண்ணெடுத்துப் பாராயோ" என்று தமது ஆசை நிறைவேறாததால் நோகின்றவர்போல் ஒருத்தி,

வேர்த்து மேனி தளர்ந்துயிர் விம்மலோ
டார்த்தி யுற்ற மடந்தைய ராரையும்
தீர்த்த னித்தனை சிந்தையிற் செங்கணிற்
பார்த்தி லன்னுட் பரிவில னோவென்றாள்.

[உடல் வியர்த்து உயிர்தளர்ந்து துன்பத்தால் அழுகின்ற மாதர் எவரையும், இந்தத் தூயவனான இராமன், செங்கண்களால் சிறிதும் நோக்கவுமில்லை, மனத்தால் சிறிதும் கருதவுமில்லை. உள்ளத்தில் ஒன்றும் இரக்கமென்பது இல்லாதவனோ இவன்.]

என அயிர்த்தாள். இரக்கமில்லையோ வென்று எதிர்மறையாய் இவள் மொழிய, இன்னொரு,

நங்கை யங்கொரு பொன்னயந் தாருய்யத்
தங்க ளின்னுயி ருங்கொடுத் தார்தமர்
எங்க ளின்னுயி ரெங்களுக் கீகிலா
வெங்க ணெங்கண் விளைந்த திவற்கென்றாள்.

[இலக்குமிபோன்ற நங்கை, விரும்பி அடைந்தவர்கள் உய்யும்படி தங்கள் உயிரையே கொடுத்து (சிபி முதலிய) இவன் குலமுதல்வர் காத்தனர். அவ்வாறிருக்க, பெண்களாகிய எங்களுடைய உயிரையே எங்களுக்குக் கொடுக்காமல் தான் கவர்ந்துசெல்கின்ற இந்தக்குரூரம் இவனிடத்தில் எப்படி உண்டாயிற்று.]

என்று, இரக்கமில்லாதவன் என்பதல்லால், கொடுமையே பூண்ட கொள்கையன் இவ்விராமன் எனச் செப்பினள். தீர்த்தனென்றும் குலத்தினி லுயர்ந்தோர

னென்றும் இவனை அவ்விருவர் பாராட்டியதைக் கேட்டிருந்தாள்போலும், வன்சொல் சில வழங்கவல்ல வனிதை வேறொருத்தி. அவள்,

மருண்ம யங்கு மடந்தையர் மாட்டொரு
பொருணை யந்திலன் போகின்ற தேயிவன்
கருணை யென்பது கண்டறி யான்பெரும்
பரிணை தன்கொல் படுகொலை யானென்றாள்.

[மோகத்தால் மயங்குகின்ற மாதர் எவரிடத்தும், அவர் கொடுக்கப்புகும் தம் அழகு இன்பம் முதலிய வொன்றையும் விரும்பி எற்காமல் இவன்செல்வது நேரிதோ. ஈதற்குப் போலவே எற்பதற்கும் கருணைவேண்டும். ஆதலால் ஈவதுமின்றி எற்பதுமின்றிச் செல்லுமிவன் கருணை என்பது இன்னதென்றே தெரியாதவன். மற்றுத் தத்துவஞானத்தால் யாவுந்துறந்த சிந்தையனிவன் என்பீரேல், கருணைக் கிடமிலா ஞானமுந்துறவு மெங்கு மில்லை — இவன் படுகொலை புரியும் பாதகனே]

எனத் தன்நாவின் நீளம் போமளவும் பழிக்கவுமாயினாள். இதனைக் கேட்டிருந்தா ளயலொருத்தி. வசையேவித் தன் கருமம் கைகூடாதென வோர்ந்து, சிறிது முகத்துதி புரிபவளாய்,

அருப்பு மென்முலை யாளங்கொ ராயிழை
இருப்பு நெஞ்சினை யேனுமோ ரேழைக்காப்
பொருப்பு வில்லைப் பொடிசெய்த புண்ணியா
கருப்பு வில்லிறுத் தாட்கொண்டு காவென்றாள்.

[அரும்புபோன்ற மெல்லிய முலையை உடையவளும் ஆய்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்தவளும் ஆய ஒருத்தி, "ஏ, இராமா, நீ இரும்புபோன்ற கடின மனதை உடையவனானாலும், சீதையை உய்விக்கும்பொருட்டு, மலைபோன்று இடைக்கிடந்த வில்லைப் பொடிசெய்த புண்ணியனேயன்றோ; எனக்கு இடர்செய்கின்ற மன்மதனது இந்த மெல்லிய கரும்புவில்லை ஒடித்து என்னைத்தான் காத்தால் ஆகாதோ]

என் றிரந்தனள். இது கேட்டிருந்த வேறோர்,

நாமத் தாலழி வாளொரு நன்னுதல்
சேமத் தார்வில் லிறுத்தது தேருங்கால்
தூமத் தார்குழற் றாமொழித் தோகைபால்
காமத் தாலன்று கல்வியி னாலென்றாள்.

[இரமிக்கச்செய்கின்ற இராமனது பேரைச் சொல்லிச் சொல்லி வருந்தினவளாகிய நல்ல நெற்றியையுடையவள், "க்ஷேமம் பொருந்திய வெற்றிமாலையுடைய சிவன்வில்லை இவன் உடைத்தது என்ன நோக்கத்தால் என்பதை ஆராயுமிடத்து— அகிற்புகை ஊட்டப்பெற்ற கூந்தலையும் தூய்மையான மொழியையும் உடைய சீதையின்பால் காமத்தினாலன்று, தன்னுடைய திறமையைக் காட்டும்பொருட்டே ஆதல் வேண்டும்.")

என்று வெறுப்புற விளம்பினாள். இங்கிவள் உரைத்தது உண்மையே உணர்ந்தமாற்றம் என்றெண்ணும்படி, ஆண்டுபல கழிந்தபின் வல்லரக்கன் வைத்த சிறைநின்று மீட்டுக்கொணர்ந்த சானகியை ஏற்றிடாது கைவிதிர்த்து ஏசலுற்ற இவ்வீரன்,

உன்னை மீட்பான் பொருட்டுவரி தூர்த்தொளிர்
மின்னை மீட்டுறு படையரக்கர் வேரறப்
பின்னை மீட்டுறு பகைகடந்தி லேன்பிழை
என்னை மீட்பான் பொருட்டிலங்கை யெய்தினேன்

[உன்னைச் சிறைநின்று மீட்டு அழைத்துக்கொள்ளுதல் பொருட்டு, கடலைத்தூர்த்து அணையிட்டும், மின்னின் மிகுந்து பிரகாசிக்கின்ற படைகளையுடைய அரக்கர்களை வேரோடு அழித்தும், பின்னும் விடாது போர்செய்த இராவணனாகிய பகைவனைக் கொல்வதும் செய்தேன் அல்லேன்—மனைவியைக் கவர்ந்துசென்ற ஒருவனைக் கொல்லாது விட்டேன் என்றஇழிவு என்னைச் சேராமல் காத்துக் கொள்ளும்பொருட்டேதான் நான் இலங்கை வந்தேன்]

என்று இச்செய்யுளின் யாப்பேபோல் இடறிஇடறிப் பேசியுளான் எனினும், சானகியை இராமன் தாரமாய்க்கொண்டது கல்வியினாலன்று, காமத்தாலாதல்வேண்டுமென்று துணிதற்கோர் ஐயமில்லை.

# மலர்வனம்

## காதன் மாதவி

ஊழ்வினை வந்துறுத்த தாதலின் ஆற்றுவரி சார்த்துவரி பாடியதோ டமைந்திலன்கோவலன். அமைந்திருப்பினல் மாதவி மனத்தை மாய்க்கும் படுபொரு ளவட்கு யாதும் புலப்பட்டிராது. காவிரிப் பேரியாற்றின் கற்பெனும் புணர்ப்பினாற் சென்னிமன்னன் புகழொன்றே கண்டிருப்பாள். வண்டலை யுழுதழிக்கும் வால்வெண் சங்கினத்தை யோட்டிய குவளைப் போதிற்குத் தங்கள் கண்களைத் துறந்து நிற்கும் காளையர் காதலுறு மதிகண்டு மாதவி நகைத்தற் கொத்ததோர் ஊரே புகாராகியிருக்கும். காதலராயவர் ஏதிலராகி அரிய சூள் பொய்த்திடாப் பெருமையைப் புகாரின்கண்கண் டவள் நனி மகிழ்வதும், மாதரார் கண்ணின்று மதிநிழலலர்ந்த நீலத் திணைமலர்தனை ஓராது மயங்கிய வண்டினையும், வளையும் முத்தும் மதியென்றும் மீனென்றும் மயங்கிய ஆம்பலையும் நினைத்துக் காவிலா வந்நகரின் அருமையை நயப்பதுமா யிருந்திருப்பாள். மகிழ்வுற நயப்பதின்றி இவ்விரு வரிகளா லவள் அவ்வியங்கொளச் செய்தன கோவலன் பாடிய கானல்வரிமுதல் மேல்வரும் பாடல்களென் றுரைக்கலாம். இவைகளில் அவள்மனம் விதிவயத்தால் கடைந்தெடுத்த நஞ்சினைக் கொண்டுபோய் முன்னரே முடிவடைந்த வரிப் பாடல்களில் பூசிப் பார்த்ததாற்றான் அவைகளாலும் நெஞ்சம் நலியலுற்றனள். இன்னவாறு நடுநிலைக் கடுவெனக் கோவலன் வாயில் விளைந்த 'கானல்வரி'ப் பாடல்களை இற்றைநாள் நண்பர்காள் நாமுங் கேட்போம்; மாதவி நினைத்தன நினைக்க முயல்வோம்; எதிருற வவளேவிய கவியினை யாய்வோம்—

828ம் பக்கத் தொடர்ச்சி.

யாழினோ டிழைந்து பாடுவான் தன் வாழ்வொழிய நின்றவவ் வணிகமைந்தன்.

துறைமேய் வலம்புரி தோய்ந்து
மணலுழுத தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து
நுண்டாது போர்க்குங் கானல்
நிறைமதி வாண்முகத்து
நேர்கயற்கண் செய்த



உறைமலி யுய்யாநோ யூர்சுணங்கு
மென்முலையே தீர்க்கும் போலும்.

[நீர்த்துறையில் மேயும் வலம்புரிச்சங்குகள் மூக்கினால் அழுத்தி மணலில் உழுதுசென்றதனால் உண்டான அடையாளம் மறையும்படி, பாரம் மிகுந்த அழகிய புன்னை மரத்தின் மலர்கள் உதிர்ந்து நுண்ணிய தாது மூடுகின்ற கடற்கரைச் சோலையின்கண், பூரண சந்திரன்போன்ற முகத்திலுள்ள கயல்போன்ற நயனங்கள் செய்த, நிறைந்த மருந்தாலும் நீங்காத இந் நோயினை, தேமல் படர்ந்த மெல்லிய அவள் முலைகளே தீர்க்கலாகும்]

தலைமகன்நிலைகண்ட பாங்கன் உறுபொருளுணர்ந்துரைத்தமாற்ற மாயினுமாகலா மிது; மற்றுத் தன்னோய்க்குத் தானே மருந்தாய அணியிழை திறத்தை நினைத்த தலைவன் தன் நெஞ்சொடு கிளத்த மாற்றமாயினுமாகலாம். துறை யெதுவாயினும் மாதவி மனத்திற் கதனால் பேதமொன்றும் நேர்ந்திராது. இதனை ஓதிய தன்காதலன் ஊக்கமும் முகப்பொலிவும் காணக்காண மாதவி கருத்தினு ளயிர்த்தனள். தன்னுடைய சரித்திரமே செப்புகின்றானல்லால் அகத்துறை யொன்றினைப் பொதுவுற ஆய்ந்து அமைக்கின்றானலனிவனென் றெண்ணினாள் மாதவி. "மணல்தோய்ந்துழுத வலம்புரிபோல் இவன் மனந்தோய்ந் துழுத கண்களு முளவோ! வரிவளை போழ்ந்துசென்ற வாலுகத்தின் வழிமறையப் புன்னைமலரும் பொன்னும் உள; மற்றுத் தன் மனத்தில் நடித்தவள் நினைவழிய வழியில்லை யென்று என்முன் பெருமிதங்கொள விளம்புகின்றனன். சுணங்கூ ரவள் மென்முலையா லல்லாலுய்யாநோய் எய்தினன்கொல்லோ" என்று சினந்தனள். சினந்தவளச் செய்யுளை மீண்டு மோர்முறை உணர முயன்றனள். ஐயமென்றது, சிலவகை யரவுபோல் தலைபல வுடையது. "முன்னிரண்டடிகளிற் கிடந்த உள்ளுறையுவமம், நிலத்தியல்பை ஒத்தோ மறுத்தோ நிகழ்கின்றது! மறுத்தாயின், 'வளையுழுத தோற்றம் மாயுங் கானலாயினும் இங்குயான் புணர்ந்தவள்நினைவு என் மனத்தின்கண் மறையாது நிலைத்திருக்கு'மென எனக்குச் சாற்றினான்; மற்றது ஒத்தபடி அமையினு மமையுமன்றே! 'சங்குழுதவழி மறையும் இக்கானலி னியற்கைக்கிணங்க, மாதவி உன்நினை வென்மனத்தினின் றழிந்தொழிந்ததுகாண்; இன்றெனுக்கு நோய்செய்து நின்றாள் வேறொருத்தி. அவள்பற்றி ஆற்றாமை அடைந்துளேன். எனது நோய் தணிக்க வல்லாளு மினி அவளே' என்றெடுத்தெனக்கிவ னியம்புஞ் சூழ்ச்சியோ விது" என்றயிர்த்தனள் மாதவி, மீண்டுஞ் சாம்பினாள்.

இவ்வண்ணம் துண்ணெனும் நெஞ்சமொடு துவளும் மாதவி மருளுறப் பின்னுந் தொடர்வான்.

நிணங்கொள் புலாலுணங்க னின்றுபுள்
ளோப்புத றலைக்கீ டாகக்
கணங்கொள்வண் டார்த்துலாங் கன்னி
நறுஞாழல் கையி லேந்தி
மணங்கமழ் பூங்கானன்
மன்னிமற் றாண்டோ
ரணங்குறையு மென்ப தறியே
னறிவேனே லடையேன் மன்னோ.

[நிணத்தோடு கூடிய ஊன்வற்றலைப் பறவைகள் கவரா வண்ணம் ஓட்டிக்கொண்டிருப்பதை வியாசமாக(Pretext) வைத்து, கூட்டமாகியவண்டுகள் ஒலித்துமொய்க்கப்பெற்ற இளமைபொருந்திய வாசனையுடைய குங்கும மரக்கிளையொன்றைத் தன் கையில் ஏந்தி, மணங்கமழ்கின்ற மலர் நிறைந்த கடற்கரைச்சோலையில் நிலைபெற்று ஓர் அணங்கு வசிக்கின்றதென்பதை யான் அறியேன். அறிந்திருப்பேனாயின் நான் அங்குப் போயிருக்கமாட்டேன்.]

வலைவாழ்நர் சேரி வலையுணங்கு
முன்றின் மலர்கை யேந்தி
விலைமீ னுணங்கற் பொருட்டாக
வேண்டுருவங் கொண்டு வேறோர்
கொலைவே னெடுங்கட்
கொடுங்கூற்றம் வாழ்வ
தலைநீர்த்தண் கான லறியே
னறிவேனே லடையேன் மன்னோ.

[வலையால் மீன்பிடித்து வாழ்கின்ற வலைஞர்களது சேரியின்கண் வலையை உலர்த்தும் முற்றத்தில், விலைக்கு விற்க வேண்டிக் காயவைத்திருக்கின்ற மீன்வற்றலைக் காக்கும் பொருட்டு, மலரைக் கையில் ஏந்தி, கொலை செய்வதற்குரிய வேல்போன்ற கண்களை உடைய ஓர் கொடிய எமன், அலைகின்ற நீருடைய குளிர்ந்த கானலில் வாழ்வதை அறியேன். அறிந்திருப்பேனாயின் அங்குப் போயிருக்கமாட்டேன்.]

கோவலன் முகமுங்கண்ணும் அவனுள்ளத்திலோர் கொந்தளிப் புற்றதேபோல் மாதவிக்குத் தெரிவித்தன போலும். இவளின்று கற்பித்துக்கொண்ட மாற்றாள் கண்களுக்குத் தானேன் ஆளாயினான் என்பதற்கு அமைதி கூறுகின்றான் போலும் கோவலன் என்றுன்னினாள். ஈற்றிருந்த 'மன்' என்ற இடைச்சொல் அவளுக்கு அசையொடு கழிவுப்பொருளதாய்த் தோன்றியது. 'கழிந்த அதனைக்கருதி என் செய' என்றோ இவனின்று தன்முன் கூறுவான்' என்று நொந்தனள் மாதவி. "யான் வேறொருத்தியை முயன்று தேடிக் கொள்ளவில்லை. அவளை யான் ஓர்நாள் எதிர்ப்படத் தானாக நேர்ந்தது. அக்கணமே அவள் என்னுள்ள மடங்கலும் கவர்ந்துகொண்டனள்." எனத் தன்னிலைக்குத் தகுதிகூறினான் கோவலன் என்று மாதவி எண்ணினாள். இதனாற்றான் சார்த்துவரிப் பாடல்களிலும், அவன் தன் செய்கையைக் கூறியதுமல்லாமல், அதுவே இயற்கையென்று பற்பலவாறு காரணமும் அமையக் கூறினான் என்றிவள் எண்ணினவளாயினாள்.

ஆதலின், தன்முறையில், மாதவி தானும் வேறோர் நாயகனைக் காதலித்திருக்கும் குறிப்புத்தோன்றும்படி,

புணர்துணையோ டாடும் பொறியலவ னோக்கி
இணர்ததைபூங் கான லென்னையு நோக்கி
உணர்வழியப் போன வொலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரியைம் பாலோய் வண்ணமுண ரேனால்.

[வளைந்து சுருண்ட கூந்தலையுடைய என் பாங்கியே, பூங்கொத்துக்கள் அடர்ந்த இந்த அழகிய கானலில் புணர்கின்ற பெண் நண்டோடு ஆடிக்கொண்டிருந்த புள்ளிகளையுடைய ஆண்நண்டையும் பார்த்து, என்னையும் பார்த்து, என்னுடைய உணர்வும் (தன்னுடைய உணர்வும்) அழியும்படி போனவனாகிய, ஒலிக்கின்ற அலையையுடைய இக் கடற்கரைத் தலைவனது கருத்து யாதென்று யான் உணரவில்லை]

என்று தோழிக்குத் தன்குறை நயப்பிப்பாள்போலத் துவக்கிக் கோவலனுக்கோர் புதிய காதலி எதிர்ப்பட்டதுபோல் தனக்குமோர் காதலன் எதிர்ப்பட்டபரிசு ஈதென்றுகாட்டினாள். இதுகேட்ட கோவலன்நெற்றி நெறித்ததுநோக்கி மாதவி, தான் அவன் மருமத்தில்

எய்தவேல் வைத்தகுறி எடுத்தது என்று ஓர்ந்து பின்வரும் கனலும் சில நுழைத்தனள்.

தம்முடைய தண்ணளியுந் தாமுந்த மான்றேரு
மெம்மை நினையாது விட்டாரே விட்டகல்க
வம்மெ னிணர வடம்புகா ளன்னங்கா
ணம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்.

[அழகியமெல்லிய பூங்கொத்துக்களுடைய அடம்புகளே, அன்னங்களே! தமது குளிர்ந்த அன்பும், தாமும், தமது குதிரைகட்டிய தேரும் கொண்டு, எம்மை நினையாமல் விட்டு அகன்றார்—அவ்வாறு விட்டகலினும் அகலட்டும்—எம்மை அவர் மறந்தாரானாலும் நாமோ அவரை ஒருநாளும் மறக்க மாட்டோம்]

இது, கோவலன் தான் காதல்கொண்ட காரிகையின் நினைவு மறவாமை வற்புறுத்தியதற் கெதிராகத் தானும் தன் காதலனை மறவாள் என்பதை மாதவி உரைத்த சூழ்ச்சியாகும்.

புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோல்
துன்ப முழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள்வாய் நெய்தானீ யெய்துங் கனவினுள்
வன்கண்ணார் கானல் வரக்கண் டறிதியோ.

[துன்பம்மிகுந்த மாலைக்காலத்தில் துயிலாது வருந்தும் என் கண்களைப்போல், இனிய கள் நிறைந்த நெய்தல் மலரே, நீயோ புலம்பாமல் நித்திரை செய்கின்றாய்.(நேரிற் காணும் பாக்கியம் எனக்கு இல்லையேனும், கனவிலேனும் அவரைக் காணலாம் என்றாலோ, கனவு தோன்றுவதற்குரிய நித்திரையைப் புலப்பும் என் கண்கள் துறந்திருக்கின்றன. நீயோ துயில்கின்றாய், ஆகையால்) நீ காணும் கனவிலாவது என்னைப் பிரிந்துசென்ற அந்த வன்மனமுடையவர் இக்கானல் வரக்கண் டிருக்கின்றாயோ, கூறுவாய்]

கருத்தி னினிமையினும் ஓசையின்பத்திலும், மித்திரர்காள், இச்செய்யுளிற்கிணை தமிழிலக்கியத்தில் நெடிது தேடினுலன்றி யொன்று நேர்தலருமை. ஈற்றடிக்கு, "வன்கணார் கானல் வரக்கண் டியிலுதியோ" என்றுள வேறோர் பாடத்தின் பொருளும் இது போன்ற அருமைத்தே. இனிய பாசுரம் இயம்பினேளனும் கொடிய எம் மாதவி தூண்டிய அவ்வியத்தால் அழியுஞ்சிந்தைக் கோவலன்நம்மைப்போ லதனழகை அனுபவிக்கும் பேறு பெற்றிலன்.

இனி, துறைமேய்ந்த வலம்புரி உழுதசோற்றம் புன்னை நறும்பூவால் கானலில்மாய்ந்ததென்று உரைத்ததில் கோவலன் தன் காதலியின் நினைவைப் பெய்து பேசினன் என்று மதித்த மாதவி அவ்வொன்றிற் கெதிர் மூன்றுபாட்டால் தன்னுடைய கற்பனைக் காதலனது நினைவிற்குரிய குறிகளை நிலத்திருத்தப் பாராட்டிப் பாடுகின்றாள்.

புள்ளியன்மான் றேராழி போன வழியெல்லாந்
தெள்ளுநீ ரோதஞ் சிதைத்தாய்மற் றென்செய்கோ
தெள்ளுநீ ரோதஞ் சிதைத்தாய்மற் றெம்மொடீங்
குள்ளாரோ டுள்ளா யுணராய்மற் றென்செய்கோ.

[பறவைபோல் விரைந்தோடும் குதிரைபூட்டிச் சென்ற என் காதலரது தேரின் சக்கரம் உருண்ட வழியெல்லாம் தெரியாதபடி, தெள்ளிய நீருடைய அலையே நீ அழித்துவிட்டாய்; (அந்தச் சுவடுபற்றி அவரிருக்குமிடம் நானும் இனிப் போவதற்கில்லை, அவரும் என்னிடம் வருவதற்கில்லை) ஐயகோ, யான் என் செய்வேன்!—இவ்வாறு அழித்த தெளிந்த நீரையுடைய அலையே, என்னைச்சுற்றியிருந்தும் என் வருத்தம் தெரிந்துகொண்டு என்காதலரை என்பால் கொணர்ந்து சேர்க்கவேண்டுமென்று உணராமல் கிடக்கின்ற என்பாங்கிமார்களோடு நீயும் இருக்கின்றாய் ஆதலால், என் துன்பத்தை உணராமல் தேர்ச்சக்கரம் சென்ற வழியையும் அழிக்கலாயினாய்—ஐயகோ இனியான் என் செய்வேன்]

நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டே
ரூர்ந்த வழிசிதைய வூர்கின்ற வோதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடு மன்னமே
யீர்ந்தண் டுறையே யிதுதகா தென்னீரே.

[அழகிய குளிர்ந்த சோலையே, பெடையோடு சேர்ந்தாடும் அன்னமே, ஈரம் வாய்ந்த குளிர்ந்த கடற்கரையே, நீங்கள் இக் கடல்அலையைப் பார்த்து, "நமக்கு வாய்த்த காதலரது பெரிய திண்ணியதேரின் சக்கரம் சென்ற வழிச்சுவடு அழிந்துவிடும்படி பாய்கின்ற அலையே, இவ்வாறு நீ செய்வது தகாது என்று சொல்லமாட்டீர்களா"

அல்லது

[நமக்கு வாய்த்த காதலரது பெரிய திண்ணிய தேரின் சக்காம் சென்ற வழிச்சுவடு அழிந்துவிடும்படி பாய்கின்ற அலையே, அழகிய குளிர்ந்த சோலையே, பெடையோடு சேர்ந்து ஆடும் அன்னமே, ஈரம்வாய்ந்த குளிர்ந்த கடற்கரையே, என்னைப் பிரிந்திருப்பது தகாதென்று நம் காதலருக்குச் சொல்லுங்கள்.]

நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டே
ரூர்ந்த வழிசிதைய வூர்ந்தாய்வாழி கடலோதம்
ஊர்ந்த வழிசிதைய வூர்ந்தாய்மற் றெம்மோடு
தீர்ந்தாய்போற் றீர்ந்திலைபால் வாழி கடலோதம்.

[நமக்குவாய்த்த காதலரது பெரிய திண்ணிய தேரின்சக்கரம் சென்ற வழிச்சுவடு அழியும்படி பாய்ந்தாய், கடல் அலையே நீ வாழ்வாயாக (கெடுவாய், என்ற குறிப்பில் வாழ்வாய், என உரைத்தது); சென்ற வழி அழியும்படி பாய்ந்தாய், எமக்கு நீ உறவுபோல் ஒன்றாயிருந்தும் உண்மையில் உறவானாய் அல்லை, கடல் அலையே, வாழ்வாயாக(கெடுவாயாக)

அல்லது

நமக்கு வாய்த்த காதலரது பெரிய திண்ணியதேரின் சக்கரம் சென்ற வழிச்சுவடு அழியும்படி பாய்ந்தாய் கடல் அலையே (இந் நல்லெண்ணத்திற்காக நீ) வாழ்க. சென்ற வழிச்சுவடு அழியும்படி பாய்ந்தாய். (இதனால் நீ எமக்கு) பகைவன்போல் தோன்றினாலும் (எம்மை விட்டுப் பிரிந்தவரை நான் மறக்கவேண்டுமென்ற உபகார எண்ணத்தோடு நீ தேர்சென்ற வழியை அழிக்கின்றாயாதலால்,உண்மையில்) பகையல்லை; கடல் அலையே, ஆகையால் நீ வாழ்வாயாக]

அன்பின்மிகுதியால் ஆற்றாதுரைக்குமிம்மொழிகளின்நயம்இவைகளின்மிகுந்திருக்கக் கலையெலாங்கற்றுத் துறைபோய கோவலனுமே வேறெங்குங் கேட்டிரான் இத்துணை ஆர்வம் அந்நாள் மாதவியின் மொழிக்கு விளைத்தது அவளுக்குக் கோவலன்பால் மேவியிருந்த அடங்காக் காதலே யாயினும், கோவலனே அம்மொழிகளுக்குத் தானன்றி அயலோர் குறிப்புண்டென்று எண்ணும்படி இந்நாடகக் கணிகை நன்கு நடித்தனள். தன்பால் பூண்டதோர் உள்ளன்பினால் அவள் பண்டுபுரிந்த பொய்யிலாச் செய்கையெல்லாம், "ஆடன் மகளே யாதலின், பாடுபெற்றன வப்பைந் தொடி தனக்கு" என்று இவன் வசந்தமாலைக்குச் செப்பியது நேரிதன்றாக, வேறோர் துறைவனைக் காதலித்தாள்போல் இவள் புரிந்த இந்நாட்டியத்தின் பொல்லாத் திறமையே பொய்யினை மெய்யென்று தோன்றச் செய்தது. என் செய்வாள் பாவம் ஏழை மாதவி; அவள் விதி யிருந்தவா றவ்வாறு. போகூழாயின் பெற்றிருந்த கல்வியும் பொல்லாங்கே செய்யும் போலும்.




## ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்,சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்தநூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும்
விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பில் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0-12-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## பருந்தும் நிழலும்.

A. பாலகிருஷ்ணன் M. A. B. L. இயற்றியது.

டிக்வன்வி, எமர்ஸன், லாண்டார், ரஸ்கின் போன்ற பல ஆங்கில ஆசிரியர்களின் பிரபலமான கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கிய நூல். அவ்வக் கட்டுரைகளுக்குத் தோற்றுவாய் விளக்கம் முதலியனவும் அருமையாய் எழுதியிருக்கின்றார்.

விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

மானேஜர், கலா நிலயம்.

11. வேளாளர் தெரு, புரசை, சென்னை.

## நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

## குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

## பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0

,, சாதாரண கட்டடம் ,, 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் ... | ... ரூ | 5 | 0 |
| அயோத்தியாகாண்டம் | ... | 5 | 0 |
| ஆரணியகாண்டம் ... | ... | 4 | 0 |
| கிட்கிந்தாகாண்டம் | ... | 4 | 8 |
| சுந்தரகாண்டம் ... | ... | 5 | 0 |

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## கணித சோதிடம்.

கணித ரீதியாய்ப் பலன் கூறுபவர். ஒருவருஷத்திற்கு மாதவாரியாகவோ அல்லது தசாபுக்தியாகவோ பலன் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஒன்பது பலனுக எழுத ரூ. 10. தினப்பலன் ரூ. 20. ஜாதகமில்லாதவர் பேரையும், கடிதம் எழுதும் நேரத்தையும் அறிவிக்கவும். ஏழு கேள்விக்கு ரூ. 1. பொருத்தம் பார்க்க ரூ. 1. ஜாதகம் குறிக்க ரூ 2. மரணத்தைப்பற்றி வருஷ மாதந் தேதி நாழியுடன் அஷ்டவர்க்க பலன் எழுத ரூ 25. புத்திர சந்தான மில்லாதவருக்குத் தோஷ நிவர்த்தி கூற ரூ. 5. அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

'அப்பாஜி சோதிடரை ஓராண்டாய் அறிவேன் அவரது சோதிடப்புலமையும் பலன்கூறும் திறத்தையும் கண்டுள்ளேன். பலன் சரியே நடந்து வருகின்றது' என, திரு T. V. கலியாணசுந்தர முதலியார் கூறுகின்றார்

அப்பாஜி ஜோஸ்யர்,

321, ஐரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

## கௌசிக சிரோ கல்பம்.

தைலங்கள் இனித் தேவை யில்லை. வியாபாரிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், வக்கீல்களுக்கும், மாணுக்கர்களுக்கும் மற்றும் மூளைவேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது. இக்கல்பம்பாலிலாவது ஜலத்திலாவது கொதிக்கவைத்து உபயோகிக்கலாம். மண்டையிடி, ஒற்றைத் தலைவலி, கண்எரிச்சல் மூளைக்கொதிப்பு முதலியவற்றை உடனே போக்கிக் கண்களுக்கு வன்மையையும் பிரகாசத்தையும் கொடுக்கும்.

பாக்கெட் 1-க்கு அணு 8. தபாற்கூலி வேறு.

இதனை விற்க எங்கும் ஏஜண்டுகள் தேவை:—

மானேஜர்:—சேலம் ஸ்டோர்ஸ்,

சேலம் —SALEM.




# வர்த்தமானம்

சீனருஷியச் சண்டை:—சீனருக்கும் சோவியத்துப் படைக்கும் பஞ்சிங்கபீங் என்னுமிடத்தில் நடந்த சண்டையில் சீனர் தோல்வியுற்று ஓடிவிட்டனர் என்று டோக்கியோச் செய்தி ஒன்று கூறுகின்றது.

***

மிதவாத மஹாநாடு:—டிசம்பர் மாதம் 29-ந் தேதியன்று, அகில இந்திய மிதவாதிகளின் மஹாநாடு சென்னையில் கூடும் என்றும், ஸர். பிரோஸிஷா செத்னு மஹாநாட்டில் தலைமை வகிப்பார் என்றும், ரைட் ஆனரபில் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் வரவேற்புக் கமிட்டித் தலைவர் பதவியை ஏற்றுவிட்டார் என்றும் தெரிகின்றது.

***

பாச்சா சாக்கோ கொல்லப்பட்டார்:—நாதர்கான் வெற்றி பெற்று அப்கன் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு, சாக்கோ பாக்கோ என்லைப்புறம் சென்று படைதிரட்டும் முயற்சியிலிருந்தார். நவம்பர்மாதம் 2 தேதியன்று புதிய அமீர் நாதர்கானின் உத்திரவின் பேரில் சாக்கோ பாக்கோவும் அவரது நண்பர் 11 பேரும் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று ஒரு பெஷவர் செய்தி கூறுகின்றது. எனினும் இதன் விவரம் ஐயமறத் தெரியவில்லை.

***

ஸ்ரீமீனுட்சி சங்கம்:—கொ. லெட்சுமிபுரம். ஷெ சங்கத்தின் 4-வது ஆண்டு 7-வது மாதக்கூட்டம் (22-10-29) அன்று திருநெல்வேலி திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் சொ. வி. மாணுக்கர் மாணவியர் பல விஷயங்களைப் பற்றியும், R. பத்மனுபன் "மாணுக்கர் கடமை" என்பது பற்றியும், ராம. சுப்பிரமணியன், "நளன் வாய்மை" என்பது பற்றியும் பேசினர் என்று காரியதரிசி ந. சொ. அருணுசலஞ் செட்டியார் அறிவிக்கின்றார்.

***

கௌசிக சீரோகல்பம்:—இப்பேருள்ள சூரணம், சேலம் ஸ்டோர் சொந்தக்காரரால் அனுப்பப்பெற்ரேம். இச்சூரணத்தை நல்லெண்ணெய்யிலோ அல்லது பசுவின் பாலிலோ கலந்து காய்ச்சித் தலைக்கு உபயோகித்தால் அது மண்டையிடி, தலைவலி, கண்ணெரிச்சல் முதலிய நோய்களைப்போக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத்தரும் என்று அறிகின்ரேம். நாம் உபயோகித்துப் பார்த்ததில், இக்கல்பம் பயனுள்ளதென்றே தெரிகின்றது. டப்பி ஒன்றின் விலை 8 அணு வாதலால் எல்லோரும் எளிதில் வாங்கி உபயோகிக்க இயலும். சேலம் ஸ்டோர்ஸ், சேலம் என்ற விலாசத்தில் இது கிடைக்கும். இதன் விளம்பரமும் நம் பத்திரிகையில் வந்து கொண்டிருக்கின்றது.

***

அரசாங்க அறிக்கை:—யுத்தம் நிறுத்திய தினத்தின் ஞாபகார்த்தமாக நவம்பர் மாதம் 11ந்தேதி காலை 11 மணிக்கு, 2 நிமிஷநேரம் எல்லோரும் மௌனமாய் இருந்து அத்தினத்தைக் கொண்டாடவேண்டும். அரசாங்கக் கார்யாலயங்களில் 2 நிமிஷ நேரம் வேலை நிறுத்தப்படும். போலீசார் அப்பொழுது போக்குவரவு முதலியவற்றை நிறுத்திவிடுவார்கள். டிராம்வேக் கம்பனியாரும் டிராம்வண்டிகளை நிறுத்திவிடுவார்கள். வியாபாரிகளும் மற்றவர்களும் அவ்வாறே அத்தினத்தைக் கொண்டாடவேண்டுமென்று அரசாங்கத்தார் கேட்டுக் கொள்கின்றனர். அத்தினத்தன்று 11 மணிக்குக் குண்டு போடப்பெறும். சென்னையில் எல்லாப் பாகத்திலிருப்பவரும் அந்தநேரத்தை அறியவேண்டி, வண்ணரப் பேட்டையிலும், துங்கம்பாக்கத்திலும் குண்டு போடப்படும். சர்ச்சுகளிலும் அந்நேரத்தை அறிவிக்க மணி அடிக்க ஏற்பாடு செய்யப்படும்.

***

ஆந்திரமாகாண மஹாநாடு:—பெஸவாடாவில் நவம்பர் மாதம் 3-ந்தேதியன்று ஆந்திர மாகாண மகாநாடு, ஸ்ரீ நாகேச்வர ராவ் அவர்களின் தலைமையில் கூடிற்று. இம் மஹாநாட்டில் பூர்ண சுயேச்சைத் தீர்மானம் பற்றி பலமான வாதம் நடந்தது. ஸ்ரீமான் M. திருமலை ராவ் என்பவர், சுயேச்சைத் தீர்மானத்தைப் பிரேரேபித்துக் கூறியதாவது.—"ராஜப்பிரதிநிதியின் அறிக்கையிலிருந்து குடியேற்ற நாட்டுரிமை உடனே வழங்கப்படும் என்று கொள்வதற்கில்லை. ஆகவே நிலைமையில் எந்தவிதமான மாறுதலும் ஏற்படவில்லை. 1930-வது ஆண்டிற்குள் குடியேற்ற நாட்டு அரசியல் உரிமை தருவதாகவும் ராஜப்பிரதிநிதி உறுதிகூறவில்லை. ஆகவே இந்தியர் முழுவிடுதலைக்கே இனி முயலவேண்டும்."

ஸ்ரீ K. கொண்டிரெட்டி என்பவர், ராஜப்பிரதிநிதியின் அறிக்கை நிலைமையில் புதியமாறுதலை உண்டுபண்ணிவிட்டதென்றும், எனவே 1930வருஷ முடிவிற்குள் குடியேற்ற நாட்டு அந்தஸ்து இந்தியாவிற்கு அளிக்கப்படாவிட்டால்தான் முழுவிடுதலையைப்பற்றி யோசிக்க வேண்டுமென்றும், அரசாங்கத்தார் சிநேக பாவத்தில் கையை நீட்டுகையில் நாம் கையை யிழுத்துக்கொண்டு பின்செல்லுதல் ராஜதந்திரமன்றென்றும் கூறி முழுவிடுதலைத் தீர்மானத்தைப் பலமாக எதிர்த்தார். ஸ்ரீமான் K. லக்ஷிமி நாராயண ஐயாவும், வேறு சிலரும் எதிர்த்துப்பேச முழுவிடுதலைத் தீர்மானம் தோற்றுப்போயது.

பிறகு மாகாண நன்மைக்கான பலதீர்மானங்கள் செய்யப்பட்டன.

***

ராஜப் பிரதிநிதியின் அறிக்கை:—இந்தியச் சீர்திருத்த விஷயமாய் ஒரு முடிவு செய்யவேண்டி இங்கிலாந்து சென்று திரும்பிய ராஜப் பிரதிநிதி சென்ற வாரம், 1919-ம் வருஷத்து இந்தியச் சீர்திருத்தச் சட்டத்தின் முன்னுரையில் கூறியபடி இந்தியாவிற்குக் குடியேற்றநாட்டு அரசியல்உரிமை அளிப்பதே பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் நோக்கமென்றும், அயல் நாட்டுவிஷயந் தவிர்த்த மற்றவிஷயங்களில் சகல உரிமைகளையும் இந்தியரிடம் கொடுக்கும்படியாகவும், சுதேச அரசாங்கத்திற்கும், இந்திய மத்திய அரசாங்கத்திற்கும் இருக்கவேண்டிய தொடர்பு பற்றியும் யோசித்து முடிவுசெய்ய இந்தியப் பிரதிநிதிகளும், சமஸ்தானப் பிரதிநிதிகளும் அழைக்கப்படுவார்கள் என்றும் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இவ்வறிக்கை காந்திஅடிகளாலும் காங்கிரஸ் மிதவாதக் கட்சியினராலும் அங்கீகரிக்கப்பட்டது. காந்தி அடிகளும் டாக்டர் சாப்ரு அவர்களும் வைசிராயின் அறிக்கையைப் பாராட்டியும், இனி வைசிராய் செய்ய வேண்டியதைக் குறித்தும் வெளியிட்டுள்ள அறிக்கையின் சுருக்கம் வருமாறு.—

இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டுரிமை அளிப்பதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கம் என்று ராஜப்பிரதிநிதி கூறிய உறுதிமொழியை ஒட்டி ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் இனிக்காரியங்கள் செய்யப்படவேண்டும். அதாவது, அரசியல்வாத குற்றவாளிகள் விடுதலை செய்யப்படவேண்டும். காங்கிரஸினுடனும் அரசாங்கத்தார் கூட்டுறவு முறையில் காரியங்களைச் செய்யவேண்டும். சட்டசபையின் முடிவிற்கும் நிர்வாகசபையார் மதிப்புக் கொடுக்கவேண்டும்.

குடியேற்ற நாட்டுரிமைக்கானவாறு திட்டம் ஒன்றைத் தயார் செய்ய இந்தியத் தலைவர்களுடன் கலந்து ஒரு ஏற்பாடு செய்யவேண்டும்.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

*MANAGER:—*

***"KALANILAYAM"***

*11, VELLALA STREET,*

**Purasawalkam MADRAS.**

189679

**1928**-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும்

## கலா நிலயம்

செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

*சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.*

2. கம்ப இராமாயணம்

*பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.*

3. அகப்பொருள் வரலாறு

*காட்சிமுதல், ஒதற்பிரவு வரை—K. இராமரத்னம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.*

4. காந்திமதி

*காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N. சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.*

5. தமிழ்ப்பாடம்

*நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.*

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

*பிரிடரிக் நீஷேன் எபிகுயூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,*

7. இலக்கிய எற்ற ஆராய்ச்சி

*E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்

*தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்*

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

*கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.*

10. இலக்கியக் கதைகள்

*புரந்தரனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்*

11. வானசாஸ்திரம்

*இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.*

மலர்வனம் பழமுதிர்சோலை

*சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுனூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.*

*காலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.*

| | | | |
|---|---|---|---|
| விலை விபரம்—தபால் செலவு உள்பட:— | பையிண்டு செய்யாதது | உள்நாடு ரூ 8—0—0 | வெளிநாடு ரூ 9—8—0 |
| | ஆப்லெதர் கில்டுபயிண்டு | உள்நாடு ரூ 10—0—0 | வெளிநாடு ரூ 11—8—0 |
| | காலிகோ பயிண்டு | உள்நாடு ரூ 9—8—0 | வெளிநாடு ரூ 11—0—0 |

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L (Editor)